
## அலகு – 3 சிந்துவெளி நாகரிகம்

### ஆறாம் வகுப்பு

தொடக்கத்தில் மனிதர்கள் குழுக்களாக வாழ்ந்தார்கள். அக்குழுக்களில் இருந்து சமுதாயங்கள் உருவாகின. பின் அவை சமூகங்களாக வளர்ந்து காலப்போக்கில் நாகரிகங்களாயின.





மேலே குறிப்பிட்ட அனைத்து நாகரிகங்களும் நதிக் கரை நாகரிகங்கள் ஆகும்.

### மக்கள் ஏன் நதிக்கரையில் குடியேறினர்?

- வளமான மண்
- ஆறுகளில் பாயும் நன்னீர் குடிப்பதற்கும் கால்நடைகளின் தேவைகளுக்கும், நீர்ப்பாசனத்திற்கும் பயன்பட்டன.
- போக்குவரத்துக்கு ஏற்ற வழிகளாக இருந்தன.

- நாகரீகம் என்ற சொல் பண்டைய இலத்தின் மொழிச் சொல்லான சிவிஸ் என்பதிலிருந்து




வந்தது இதன் பொருள் நகரம் ஆகும்

### ஹரப்பா - புதையுண்ட நகரம்

- ஹரப்பா நகரத்தின் இடிபாடுகளை முதன் முதலில் சார்லஸ் மேசன் என்ற ஆங்கிலேயர் தமது நூலில் விவரித்தார்.
- அவர் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்த படை வீரரும், ஆராய்ச்சியாளரும் ஆவார். அவர் தற்போது பாகிஸ்தானில் உள்ள இந்தியாவின் வடமேற்கு பகுதியைப் பார்வையிட்ட போது சில செங்கல் திட்டுகள் இருப்பதைக் கண்டார்.
- "அந்த பாழடைந்த செங்கற்கோட்டை உயரமான சுவர்களுடனும், கோபுரங்களுடனும் ஒரு மலை மீது கட்டப் பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டார். இது தான் ஹரப்பா இருந்ததற்கான முதல் வரலாற்றுச் சான்று ஆகும்.

tnpscbooks

- கி.பி (பொ.ஆ) 1856 - இல் பொறியாளர்கள் லாகூரில் இருந்து கராச்சிக்கு இரயில் பாதை அமைக்கும் பொருட்டு நிலத்தைத் தோண்டிய பொழுது அதிகமான சுட்ட செங்கற்கள் கண்டறியப்பட்டன.

- கி.பி (பொ.ஆ) 1920இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ நகரங்களை அகழாய்வு செய்யஆரம்பித்தனர்.

- 1924இல் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநர் ஜான் மார்ஷல் ஹரப்பாவிற்கும், மொகஞ்ச-தாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருப்பதைக் கண்டறிந்தார். அவை இரண்டுமே ஒரு பெரியநாகரிகத்தைச் சார்ந்தவெவ்வேறு பகுதிகள் என்ற முடிவுக்கு வந்தார்.

- ஹரப்பா நாகரிகம் மொகஞ்ச-தாரோவைவிடப் பழமையானது என முடிவுக்கு வருகின்றனர்.

- நிலத்தடியை ஆய்வு செய்ய காந்தப்புல வருடியை பயன்படுத்துகின்றனர்

- இந்திய தொல்பொருள்கள் புதையுண்டு இருக்கின்றனவா? இல்லையா? என்பதே ரோடார் கருவி மூலம் அறிய முடியும் (தொலை நுண்ணுணர்வு முறை)

இந்திய தொல்லியல் துறை - ASI (Archaeological Survey of India) 1861 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் கன்னி ஹாம் என்ற நில அளவையாளர் உதவியுடன் நிறுவப்பட்டது.இதன் தலைமையகம் புதுடில்லியில் உள்ளது.

வெண்கல காலம் என்பது மக்கள் வெண்கலத்தால் ஆன பொருட்களை பயன்படுத்திய காலம் ஆகும்


கால வரையறை

- புவி எல்லை- தெற்கு ஆசியா
- காலப்பகுதி - வெண்கலக்காலம்
- காலம் - கி.மு (பொ.ஆ.மு) 3300 –1900 (கதிரியக்க கார்பன் வயதுக் கணிப்பு முறை மூலம் செய்யப்பட்டது)
- பரப்பு - 13 லட்சம் சதுரகி.மீ
- நகரங்கள் - 6 பெரியநகரங்கள்
- கிராமங்கள் - 200க்கும் மேற்பட்டவை

ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம். அதற்கான காரணங்கள்

- சிறப்பான நகரத் திட்டமிடல்
- சிறப்பான கட்டிடக் கலை வேலைப்பாடு
- தூய்மைக்கும், பொதுச் சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள்.
- விவசாய மற்றும் கைவினைத் தொழில்களுக்கானத் திடமானஅடித்தளம்

- சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பம்சமே திட்டமிட்ட நகர அமைப்பு ஆகும்.
- நகரம் திட்டமிடப்பட்ட இரண்டு பகுதிகளாக இருந்தது.




## மெஹர்கர் - சிந்து வெளி நாகரிகத்துக்கு முன்னோடி

- மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடம் ஆகும்.
- இது பாகிஸ்தான் நாட்டில் பலுச்சிஸ்தான் மாநிலத்தில் போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.
- இது தொடக்ககால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கண்டறியப்பட்ட இடங்களுள் ஒன்று. மக்கள் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டதற்கான சான்று இங்கு கிடைத்துள்ளது.
- கி.மு (பொ.ஆ.மு) 7000-ஐ ஒட்டிய காலத்திலேயே மெஹெர்கரில் நாகரிகத்துக்கு முந்தைய வாழ்க்கை நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

## தெருக்களும் வீடுகளும்

- தெருக்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டிருந்தன.
- தெருக்கள் நேராக அமைக்கப்பட்டிருந்தன. அவைவடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் சென்றன. ஒன்றைஒன்று செங்கோணத்தில் வெட்டிக் கொள்ளும் படியும் இருந்தன.
- சாலைகள் அகலமாகவும் வளைவான முனைகளைக் கொண்டதாகவும் இருந்தன.
- வீடுகள், தெருக்களின் இரு ஓரங்களிலும் சீராக அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் ஒன்று அல்லது இரண்டு மாடி அடுக்குகளை உடையனவாகக் காணப்படுகின்றன.
- பெரும்பாலான வீடுகள் பல அறைகளையும் ஒரு முற்றத்தையும் ஒரு கிணற்றையும் கொண்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் கழிவறையும், குளியலறையும் இருந்திருக்கின்றன.
- வீடுகள் சுட்ட செங்கற்களாலும் சுண்ணாம்புக் கலவையாலும் கட்டப்பட்டிருந்தன. சூரிய வெப்பத்தில் உலர வைக்கப்பட்ட செங்கற்களும் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலான செங்கற்கள் சீரான அளவுகள் உடையதாகவே இருந்தன. கூரைகள் சமதளமாக இருந்தன.
- கட்டடங்கள் கட்டுவதற்கு ஏன் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன? ஏனென்றால் அவை வலுவானவை,

கடினமானவை, நிலைத்து நிற்கக் கூடியவை நெருப்பை கூட தாங்குபவை. அவை நீரினால் கரைவதில்லை.

- அரண்மனைகள், வழிபாட்டுத் தலங்கள் இருந்ததைத் தீர்மானிக்கக் கூடிய சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

## கழிவு நீர் அமைப்பு

- ஏறத்தாழ எல்லா நகரங்களிலும் மூடப்பட்ட கழிவு நீர் வடிகால் அமைப்பு இருந்தது. வடிகால்கள் செங்கற்களைக் கொண்டும் கல் தட்டைகளைக் கொண்டும் மூடப்பட்டிருந்தன.
- வடிகால் கழிவு நீர் தேங்காமல் செல்ல வசதியாக லேசான மென் சரிவைக் கொண்டிருந்தது. கழிவுப் பொருள்களை அப்புறப் படுத்துவதற்கான துளைகளும் சரியான இடை வெளியில் அமைக்கப்பட்டிருந்தன.
- வீட்டிலிருந்து கழிவு நீர் பல தெருக்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் மூலமாக முக்கிய வடிகால்களைச் சென்றடையுமாறு அமைக்கப்பட்டிருந்தது
- ஒவ்வொரு வீட்டிலும் திடக் கழிவுகளைத் தேக்குவதற்கான குழிகள் இருந்தன. அவை திடக் கழிவுகளைத் தேக்கி, கழிவு நீரை மட்டும் வெளியேற்றின.

## பெருங்குளம் - மொகஞ்ச-தாரோ

- பெருங்குளமானது நன்கு அகன்று, செவ்வக வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும். இது நகரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. நீர் கசியாத கட்டுமானத்துக்கான மிகப் பழமையான சான்று எனலாம்.
- இக்குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, நீர் கசியாமல் இருப்பதற்காக சுவரிலும், தளத்திலும் பலஅடுக்குகள் இயற்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தன
- வட புறத்திலிருந்தும், தென் புறத்திலிருந்தும் குளத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தின் பக்கவாட்டில் மூன்று புறமும் அறைகள் உள்ளன.
- அருகில் இருந்த கிணற்றில் இருந்து நீர் இறைக்கப்பட்டு பெருங்குளத்தில் விடப்பட்டது. உபயோகப்படுத்தப்பட்ட நீர் வெளியேறவும் வகை செய்யப்பட்டிருந்தது.

## தானியக் களஞ்சியம் – ஹரப்பா

- தானியக் களஞ்சியம் – செங்கற்களால் அடித்தளமிடப் பட்ட, பெரிய, உறுதியான கட்டட அமைப்பு. இவை தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன் படுத்தப் பட்டன.
- தளவெடிப்புகளில் கோதுமை, பார்லி, தினை வகைகள், எள் மற்றும் பருப்பு வகைகளின்மிச்சங்கள் சிதறிக் காணப்பட்டன.
- செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட தானியக்களஞ்சியம் ஒன்று ஹரியானா மாநிலத்தில் உள்ள ராகி கர்கியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இது முதிர்ச்சி அடைந்த ஹரப்பா காலத்தை சார்ந்தது

## மாபெரும் கட்டடங்கள்

- மொஞ்ச-தாரோவில் இருந்த இன்னொரு மிகப்பெரும் பொதுக் கட்டடம், கூட்ட அரங்கு ஆகும்.
- இது 20 தூண்கள் 4 வரிசைகளை கொண்டு பரந்து விரிந்தகூடம் ஆகும்.

### ஹரப்பாமக்கள் பெரும் வணிகர்களாக இருந்தனர்.

- தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் அவர்களால் பயன்படுத்தப்பட்டன. பொருட்களின் நீளத்தை அளவிட, அளவுகள் குறிக்கப்பட்ட குச்சிகளைப் பயன்படுத்தினர்.
- அவர்கள் சக்கர வண்டிகளைப் பயன்படுத்தினர். ஆரக்கால் இல்லாத, திடமான சக்கரங்களைப் பயன்படுத்தினர்.
- மெசபடோமியாவுடன் விரிவான கடல் வணிகம் நடைபெற்றிருக்கிறது. சிந்து வெளி முத்திரைகள் தற்கால ஈராக், குவைத் மற்றும் சிரியா ஆகியபகுதிகளைக் குறிக்கும் பண்டைய மெசபடோமியாவில் உள்ள சுமேர் பகுதிகளில் கிடைத்துள்ளமை இதை உறுதிப்படுத்துகிறது. போக்குவரத்திற்குக் காளைகளைப் பயன்படுத்தினர்
- பாரசீக வளைகுடா மற்றும் மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்று உருளை வடிவ முத்திரைகள் சிந்து வெளிப் பகுதியிலும் 139 காணப் படுகின்றன. இது இந்த இரு பகுதிகளுக்கும் இடையில் வணிகம் நடைபெற்றதைக் காட்டுகிறது .

### கப்பல் கட்டும் தளம் - லோத்தல்

- தற்கால குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.
- லோத்தல் என்னும் இடம் குஜராத்தில் சபர்மதி ஆற்றின் ஒரு துணைஆற்றின் கரையில் அமைந்துள்ளது

### மொகஞ்ச-தாரோ-தலைவர்

- அமர்ந்த நிலையில் உள்ள ஓர் ஆண் சிலை மொகஞ்ச-தாரோவில் உள்ள ஒரு கட்டிடத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
- அது நெற்றியில் ஒரு தலைப் பட்டையுடனும் வலது கை மேல் பகுதியில் ஒரு சிறிய அணிகலனுடனும் காணப்படுகிறது.
- அதன் தலை முடியும், தாடியும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டு காணப்படுகிறது.
- காதுகளின் கீழ்காணப்படும் இரு துளைகள், தலையில் அணியப்படும் அணிகலனைக் காது வரை இணைக்க ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் .
- இடது தோள் பூக்கள் மற்றும் வளையங்களின் வடிவமைப்பில் அலங்கரிக்கப்பட்ட ஒரு மேலங்கியால் மூடப்பட்டுள்ளது.
- இது போன்ற வடிவமைப்பு அப்பகுதியில் உள்ள மக்களால் இன்றளவும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



மொகஞ்சதாரோவில் வெண்கலத்தால் ஆன இந்த சிறிய பெண் சிலை கிடைத்தது. நடனம் மாது என்று குறிப்பிடப்படுகிற இந்த சிலையை பார்த்த சர் ஜான் மார்சல் முதலில் இந்த சிலையை நான் பார்த்த பொழுது இது வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் உருவாக்க முறையை சார்ந்தது என்று நம்புவது கடினமாக இருந்தது ஏனெனில் இது போன்ற உருவாக்கம் பண்டைய மக்களுக்கு கிரேக்க காலம் வரை தெரியவில்லை. இவை ஏறத்தாழ 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என நினைத்தேன். இச்சிலைகள் அக்காலகட்டத்திற்கு உரியதாகவே இருந்தன என்றார்.

## தொழில் நுட்பம்

- சிந்துவெளி நாகரிக மக்கள் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகளைஉருவாக்கினர்.
- குஜராத் மாநிலத்தில் உள்ள லோத்தலில் கண்டு பிடிக்கப்பட்ட தந்தத்தினாலானஅளவுகோல் 1704 மி.மீ. வரை சிறியஅளவீடுகளைக் கொண்டுள்ளது. (அதன் சம காலத்திய நாகரிகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அளவுகோல்களில் இது தான் மிகச் சிறியபிரிவு ஆகும்)

மனிதர்களால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட




உலோகம் செம்பு கே. வி. டி. ( கொற்கை- வஞ்சி தொண்டி ) வளாகம் பாகிஸ்தானில் இன்றும் கொற்கை, வஞ்சி, தொண்டி, மத்ரை,உறை,கூடல்நகர் என்ற பெயர் கொண்ட இடங்கள் உள்ளன. கொற்கை பூம்புகார் போன்ற சங்க கால நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் பெயர்களுடன் உள்ள இடங்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளன ஆப்கானிஸ்தானில் உள்ள ஆறுகளான காவ்ரி, பொருண்ஸ் மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஆறுகளான காவிரி வாலா மற்றும் பொருனை ஆகிய பெயர்கள் தமிழ் சொற்களை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன

## சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்கள்

### உடை

- பொதுவாக பருத்தி ஆடைகளே பயன்பாட்டில் இருந்தன.
- அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நூலைச் சுற்றி வைப்பதற்கான சுழல் அச்சுக்கள் மூலம் அவர்கள் நூற்கவும் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.
- கம்பளி ஆடைகளும் உபயோகப் படுத்தப்பட்டன.
-

## அன்பும் அமைதியும்

- குடியிருப்புகள் தரைமட்டத்திலிருந்து நன்கு உயர்த்தப்பட்ட தளங்களில் கட்டப்பட்டிருந்தன.
- சிந்துவெளி மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்திருப்பதாகவே தோன்றுகிறது. ஏனென்றால் அவர்களிடம் படை இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. மேலும் சில ஆயுதங்கள் மட்டுமே அங்கிருந்து கிடைத்துள்ளன.
- அவர்கள் தங்களின் மேம்பட்ட நிலையை அவர்களுடையஆடைகள், விலை மதிப்பற்ற நகைகள் மற்றும் மேம்பட்ட நகர வாழ்க்கை மூலம் வெளிப்படுத்தினர்.

## அணிகலன்கள்

- ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்திருக்கின்றனர்.
- கழுத்தணிகள், கையணிகள், வளையல்கள், மோதிரங்கள், காதணிகள் மற்றும் காலணிகள் முதலியவற்றையும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், சங்கு, செம்பு, சுடுமண் மற்றும் விலையுயர்ந்த கற்களால் அணிகலன்கள் செய்யப்பட்டிருந்தன.

சிந்துவெளி மக்கள் இரும்பு மற்றும் குதிரையை அறிந்திருக்கவில்லை சிந்துவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்பு நிற மணி கற்களை பயன்படுத்தினர்

## நகரத் திட்டமிடல்

நகரத் திட்டமிடலை நிர்வகிக்கவும், வணிகத்தை மேம்படுத்தவும், நகரத்தில் அமைதியை நிலைநாட்டவும், வடிகால் அமைப்பைப் பராமரிக்கவும், ஓர் அதிகார மையம் இருந்து இருக்க வேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றனர்.

## தொழில்

- சிந்துவெளி மக்களின் முதன்மையான தொழில் பற்றி எதுவும் தெரியவில்லை, எனினும் வேளாண்மை, கைவினைப் பொருள்கள் செய்தல், பானை வனைதல், அணிகலன்கள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர் என தெரிகிறது.
- அங்கு வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களும் இருந்துள்ளனர்.
- கால்நடைவளர்ப்பும் அவர்களது தொழிலாக இருந்தது.
- அவர்கள் சக்கரத்தின் பயனையும் அறிந்திருந்தனர்.

### மட்பாண்டங்கள்

- மட்பாண்டங்களைச் சக்கரங்கள் கொண்டு உருவாக்கினர். அவை தீயிலிட்டுச் சுடப்பட்டன.
- மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணத்தில் இருந்தன. அதில் கருப்பு வண்ணத்தில் அழகிய வேலைப்பாடுகளைச் செய்தனர்.
- அங்கு கிடைத்த உடைந்த பானைத் துண்டுகள் விலங்குகளின் உருவங்களுடனும், வடிவியல் வடிவமைப்புகளுடனும் காணப்படுகின்றன

### சமய நம்பிக்கை

- சிந்துவெளி மக்களின் வழிபாடு மற்றும் அவர்களின் மத நடைமுறைகள் பற்றி அறிய எந்த ஓர் ஆதாரமும் கிடைக்கவில்லை.
- அங்கு கிடைக்கப் பெற்ற பெண் சிலைகள் மூலம் சிந்து வெளி மக்களிடையே தாய் தெய்வ வழிபாடு இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது

**கலைத்திறன்**

பொம்மை வண்டிகள், தலையையும், கால்களையும் அசைக்கக்கூடிய பசுபொம்மைகள், களிமண் பந்துகள், சிறிய பொம்மைகள், சிறிய களிமண் குரங்கு, சுடுமண் பொம்மைகள், கொட்டைகளைக் கொறிக்கும் அணில் பொம்மைகள், மண்ணால் ஆன நாய்கள், நடனமாடும் ஆண் பொம்மை போன்றவையும் கிடைத்துள்ளன.

சுடுமண்ணால் செய்யப்பட்ட பல்வேறு வகையான பொம்மைகள் மக்களின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு ஆர்வத்தைக் காட்டுகின்றன .



எழுத்து வடிவம் சுமேரியர்களால் உருவாக்கப்பட்டது.

மொகஞ்சதாரோவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடம் உலக பாரம்பரிய தளமாக யுனெஸ்கோ அமைப்பால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

### ஹரப்பா நாகரிகத்திற்கு நடந்தது என்ன?

கி.மு.(பொ.ஆ.மு) 1900ஆம் ஆண்டில் ஹரப்பா நாகரிகம் சரியத் தொடங்கியது. அதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாக அமைந்திருக்கலாம்.

- ஆற்றின் கரையில் உள்ள அதன் நகரங்களில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு
- சுற்றுச்சூழல் மாற்றம்
- படையெடுப்பு
- இயற்கைச் சீற்றங்கள்
- காலநிலைமாற்றம்
- காடுகள் அழிதல்
- தொற்று நோய்த் தாக்குதல்

### சிந்து வெளி நாகரிகம் - பொதுவான உண்மைகள்

- உலகின் மிகப் பழமையான நாகரிகங்களில் ஒன்று .
- பழமையான நான்கு நாகரிகங்களில் பெரிய பரப்பளவு கொண்டது.
- உலகின் முதல் திட்டமிடப்பட்ட நகரங்கள்.
- மேம்பட்ட சுகாதாரம் மற்றும் வடிகால் அமைப்பு.
- சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றியஉணர்வு மேலோங்கியிருந்தது


கதிரியக்க கார்பன் வயது கணிப்பு முறை தொல்லியல் ஆய்வாளர்களுக்கான தரப்படுத்தப்பட்ட முறை
கார்பனின் கதிரியக்க ஐசோடோப் ஆன கார்பன் 14 பயன்படுத்தி ஒரு பொருளின் வயதை அறியும் முறை கதிரியக்க கார்பன் முறை அல்லது கார்பன் 14 ( $C_{14}$) முறை என்று அழைக்கப்படுகிறது

- மொகஞ்ச-தாரோவில் காணப்படுகின்ற பெருங்குளமே உலகின் முதன் முதலில் கட்டப்பட்ட பொதுக் குளம் ஆகும்.

## நாகரிகத்தின் பரப்பளவு:

- மேற்கில் - பலுசிஸ்தானின் மக்ரான் கடற்கரை வரை
- கிழக்கில் - காகர்– ஹாக்ராநதிப் பள்ளத்தாக்கு வரை
- வடகிழக்கில் - ஆப்கானிஸ்தான்
- தெற்கில் – மகாராஷ்ரா வரை பரவியிருந்தது


tnpscbooks



**கிசா பிரமிடு –** கி.மு (பொ.ஆ.மு) 2500 இல் குஃபு மன்னனால் சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்டது.



**உர் ஜிகுராட் –** மெசபடோமியா (சுமேரியர் காலம்) உர் நம்மு என்ற அரசனால் சின் என்ற சந்திர கடவுளுக்கு கட்டப்பட்டது.



**அபு சிம்பல்** – எகிப்து அரசன் இரண்டாம் ராமெசிஸ் என்பவரால் கட்டப்பட்ட இரட்டைக் கோயில்கள் உள்ள இடம்.

## ஒன்பதாம் வகுப்பு

### அலகு 2 - பண்டைய நாகரிகங்கள்

- நாகரிகம் என்பது ஒரு முன்னேறிய, முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்று கருதப்படுகிறது.
- அதிகமான எகிப்திய, மெசபடோமியா, சிந்துவெளி, சீன நாகரிகங்கள் பண்டைய நாகரிகங்களில் முக்கியமானவையாகும்.
- நாகரிகங்கள் தழைத்த அதே காலகட்டத்தில், உலகின் மற்ற பகுதிகளில் வாழ்ந்தோர் வேட்டையாடுவோராகவும், உணவு சேகரிப்போராக, மேய்ச்சல் காரர்களாக வாழ்ந்தார்கள்.

### சிந்துவெளி நாகரிகம்

ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படும் சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் சுமார் 1.3 மில்லியன் சதுர கிலோ மீட்டர்கள் பரவியிருந்தது.

- மேற்கே பாகிஸ்தான் – ஈரான் எல்லையில் உள்ள சுட்காஜென்-டோர்,
- வடக்கே ஷோர்டுகை (ஆப்கனிஸ்தான்)
- கிழக்கே ஆலம்கீர்பூர் (உத்திரப்பிரதேசம் – இந்தியா),
- தெற்கே டைமாபாத் (மஹாராஷ்ட்ரா – இந்தியா) - ஆகிய இடங்களை எல்லைகளாகக் கொண்டது

### திட்டமிடப்பட்ட நகரங்கள்

- ஹரப்பா நகரங்களில் சுவர்கள்,நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன.
- ஹரப்பா மக்கள் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.
- உள்ளாட்சி அமைப்பு ஒன்று நகரங்களின் திட்டமிடலை கட்டுப்படுத்தியிருக்கக் கூடும். சில வீடுகளில் மாடிகள் இருந்தன.
- மொஹஞ்சதாரோவில் உள்ள மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும். இக்குளத்தின் அருகே நன்கு தளமிடப்பட்ட அறைகளும் உள்ளன. தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் காணப்படுகின்றன.
- ஹரப்பரகளின் அரசு அமைப்பு பற்றி நமக்கு விபரங்கள் தெரிவில்லை. ஆனால், பண்டைய அரசு போன்ற ஒரு அரசியலமைப்பு ஒன்று இருந்திருக்க வேண்டும்.
- மொஹஞ்சதாரோவிலிருந்து கிடைத்துள்ள ஒரு சிலை "பூசாரி அரசன்" என்று அடையாளம் காட்டப்படுகிறது.

ஹரப்பா தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால் சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாகரிகம் சிந்து

நதிக்கு அப்பாலும் பரவி உள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்று முன்னர் அழைக்கப்பட்டதற்கு மாறாக ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது

- ஹரப்பா (பஞ்சாப், பாகிஸ்தான்),
- மொஹஞ்சதாரோ (சிந்து, பாகிஸ்தான்),
- டோலவிரா (குஜராத், இந்தியா),
- கலிபங்கன் (ராஜஸ்தான், இந்தியா),
- லோத்தல் (குஜராத், இந்தியா)
- மானவாலி (ராஜஸ்தான், இந்தியா)
- ராகிகரி (ஹரியானா, இந்தியா)
- சுர்கொடடா (குஜராத், இந்தியா)

## வேளாண்மையும் கால்நடைவளர்ப்பும்

- ஹரப்பா மக்கள் வேண்மையில் ஈடுபட்டனர்- கோதுமை, பார்லி மற்றும் பல விதமான தினை வகைகளைப் பயிரிட்டார்கள்.
- இரட்டைச் சாகுபடி முறையையும் கடைப்பிடித்தார்கள்.
- மாடுகள், செம்மறியாடுகள், ஆடுகளையும் அவர்கள் வளர்த்தார்கள்.
- யானை உள்ளிட்ட பல விலங்குகள் பற்றி அறிந்திருந்தார்கள்.
- குதிரைகளைப் பயன்படுத்தவில்லை.
- ஹரப்பாவின் மாடுகள் ஜெபு என்றழைக்கப்படும். இது ஒரு அரிய வகை மாட்டின் இனம்.
- சிந்துவெளி முத்திரைகளில் கரிய காளை உருவம் பரவலாகக் காணப்படுகிறது.

## மட்பாண்டக்கலை

- ஹரப்பா மக்கள் ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். மட்பாண்டங்கள் ஆழமான சிவப்பு வண்ணம் பூசப்பட்டு கருப்பு நிற ஓவியங்கள் தீ ட்ட ப் பட்டவை.
- பீடம் வைத்த தட்டு, தானியம் போன்றவற்றைச் சேமித்து வைப்பதற்கான ஜாடிகள் , துளையிடப்பட்ட ஜாடிகள், 'S' வடிவ ஜாடிகள், தட்டுகள், சிறுதட்டுகள், கிண்ணங்கள், பானைகள் என்று பலவிதமானமட்பாண்டங்களை செய்தார்கள்.
- மட்பாண்டங்களில் சித்திரங்களைத் தீட்டினார்கள்.
- அரசமர இலை, மீன் செதில், ஒன்றையொன்றுடும் வட்டங்கள், குறுக்கும் நெடுக்குமான டுகள், கிடைக்கோட்டுப் பட்டைகள், கணித வடிவியல் (ஜியோமதி) வடிவங்கள், கொடிகள் எனப் பல்வேறு ஓவியங்களைக் கருப்பு நிறத்தில் தீட்டினார்கள்

## உலோகக்கருவிகளும் ஆயுதங்களும்

- எலும்பாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள். இரும்பின் பயனை அறியவில்லை.
- கூர்மையான கருவிகள், உளிகள், ஊசிகள், மீன் தூண்டில் முட்கள், கத்திகள், நிறுவைத் தட்டுகள், முகம் பார்க்கும் கண்ணாடி,

அஞ்சனம் தீட்டும் குச்சி ஆகியவை செம்பால் ய்யப்பட்டன.

- செம்பில் செய்த அம்புகள், ஈட்டிகள், உளி ஆகிய கருவிகளைப் பயன்படுத்தினார்கள்
- மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள நடனமாடும் பெண்ணின் சிலை, அவர்களுக்கு மெழுகு அச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றி சிலை வார்க்கும் 'லாஸ்ட் வேக்ஸ்' தொழில் நுட்பம் இழந்த மெழுகு செயல்முறை (lost - wax process) தெரிந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.
- ஹரப்பா மக்கள் கல் மற்றும் வெண்கலத்தினாலான ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

## ஆடை, அணிகலன்கள்

- ஹரப்பா பண்பாட்டு மக்கள் பருத்தி மற்றும் பட்டு பற்றி அறிந்திருந்தார்கள். உலோகத்தாலும் கல்லாலுமான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள்.
- சங்கு வளையல்களையும் செய்தார்கள்.

## வணிகமும் பரிமாற்றமும்

- ஹரப்பா மக்களுக்கு மெசபடோமியர்களுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு இருந்தது. மேற்காசிய பகுதிகளான ஓமன், , ஈராக், ஈரான் போன்ற பகுதிகளில் ஹரப்பா முத்திரைகள் கிடைத்துள்ளன.
- கியூனிபார்ம் ஆவணங்கள் சபடோமியாவிற்கும், ஹரப்பர்களுக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பை வெளிபடுத்துகின்றன.
- கியூனிபார்ம் எழுத்துகளில் காணப்படும் மெலுஹா என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்.

## எடைகளும் அளவுகளும்

- ஹரப்பா மக்கள் முறையான எடைகளையும் அளவுகளையும் பயன்படுத்தினார்கள். வணிகப் பரிமாற்றங்களில் ஈடுபட்ட காரணத்தால் அவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட அளவுகள் தேவையாக இருந்தது.
- ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் கனசதுரமான எடைகள் கிடைத்துள்ளன.
- எடைகள் ஈரடிமான எண் முறை (பைனரி) பற்றி ரிந்திருந்ததைக் காட்டுகின்றன. எடைகளின் விகிதம் 1: 2 : 4 : 8 : 16 : 32 என்று இரண்டிரண்டு மடங்காக அதிகரித்தன.

## முத்திரைகள், எழுத்துருக்கள்

- ஹரப்பா பண்பாட்டுப் பகுதிகளில் நுரைக்கல், சுடுமண் தந்தம் ஆகியவற்றால் செய்யப்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன.
- ஹரப்பா பகுதிகளிலிருந்து சுமார் 5000 சிறு எழுத்துத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சில அறிஞர்கள் இவை திராவிட மொழியின என்று உறுதியாகக் கருதுகிறார்கள்.
- சிந்துவெளி நாகரிகமே இந்தியப் பண்பாட்டு உருவாக்கத்துக்கான அடித்தளம் எனலாம்.

## கலைகள், பொழுதுபோக்குகள்

- ஹரப்பா பகுதிகளில் கிடைத்துள்ள சுடுமண்ணாலான சிறுசிலைகள்,

மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்கள், வெண்கலச் சிலைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் கலைத் திறமையைக் காட்டுகின்றன.

- மாக்கல்லில்செய்யப்பட்ட 'மதகுரு அல்லது அரசன்', நடனமாடும் பெண் சிலை (இரண்டும் மொஹஞ்சதாரோவில் கிடைத்தவை), ஹரப்பா, மொஹஞ்சதாரோ, தோலாவிராவில் கிடைத்த கற்சிலைகள் முக்கியமான கலைப் படைப்புகள்.
- பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், பம்பரங்கள், கோலிக்குண்டுகள் விளையாட்டிற்கான சுடுமண் சில்லுகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விடையாட்டுகளைக் காட்டுகின்றன.

## சமயம்

- சிந்துவெளி மக்கள் இயற்கையை வணங்கினார்கள்.
- அரசமரத்தை வழிபட்டார்கள்.
- காலிபங்கனில் நெருப்புக் குண்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இறந்தவர்களைப் புதைப்பது வழக்கத்திலிருந்தது. இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் இருந்ததற்கான சான்றுகள் அரிதாகக் கிடைத்துள்ளன.

## ஹரப்பா மக்களும், பண்பாடும்

- திராவிட மொழியைப் பேசினார்கள் என்று அறிஞர்களில் ஒரு சாரார் கூறுகிறார்கள்.
- சிந்துவெளி நாகரிகத்தில் ஒன்றுக்கும் அதிகமான குழுக்கள் இருந்தன.
- சிந்துவெளியில் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், வேட்டையாடுவோர் – உணவு கரிப்போர் வாழ்ந்திருக்கிறார்கள்.

## சிந்துவெளி கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறது:

- கி.மு. (பொ.ஆ.மு) 3300 முதல் கி.பி (பொ.ஆ.மு) 2600 காலகட்டம் - தொடக்க ஹரப்பா நாகரிகம்.
- கி.மு. (பொ.ஆ.மு) 2600- 1900 வரையான காலகட்டம் - முதிர்ந்த ஹரப்பா நாகரிகம்
- கி.மு. (பொ.ஆ.மு) 1700 வரை - பிந்தைய ஹரப்பா

## சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி

- சுமார் கி.மு. (பொ.ஆ.மு) 1900லிருந்து சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி வங்கியது.
- பருவநிலை மாற்றம், சபடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி.
- நதியின் வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு.
- அந்நியர் படையெடுப்பு

**சிந்துவெளி எழுத்துகள் – ஆய்வு**

- ஹரப்பா மக்கள் எழுதும் கலையை அறிந்திருந்தனர்.
- இந்த எழுத்துகள் இலச்சினைகள், சுடுமண் முத்திரைகள், மட்பாண்டங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன.
- பொறிப்புகள் மிகவும் குறுகியவை. தொடர்கள் சராசரியாக ஐந்துக்கும் குறைவான குறியீடுகளையே கொண்டுள்ளன.
- ரோசட்டா கல்லில் காணப்பட்டது போல மும்மொழிகள் பயன்படுத்தப்படவில்லை.
- எழுத்துகள் வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாக எழுதப்பட்டுள்ளன.
- கணினி மூலம் பகுப்பாய்வு செய்த இரஷ்ய அறிஞர் யூரி நோரோசோவ் சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிக் குடும்பம் போன்ற வார்த்தை வரிசையைப் பெற்றுள்ளன என்கிறார்.
- சிந்துவெளி நாகரிகம் குறித்து விரிவான ஆய்வு செய்துள்ள அறிஞரான ஐராவதம் மகாதேவன் "ஹரப்பா மொழியின் மூல வேர்கள் தென்னிந்திய திராவிட மொழிகளை ஒத்திருப்பதை நாம் காணலாம்" என்கிறார்.
- மயிலாடுதுறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்கோடரியில் உள்ள குறியீடுகள் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டவையில் உள்ள குறியீடுகளை ஒத்திருக்கின்றன என்று கூறுகிறார் ஐராவதம் மகாதேவன்.
- மே 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு தொல்லியல் துறையால் பூம்புகாருக்கு அருகில் மேலபெரும்பள்ளம் என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பானைகளில் உள்ள அம்பு போன்ற குறியீடுகள் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளைப் போன்று உள்ளன.



அலகு - 1 பண்டைய இந்தியா தொடக்க முதல் சிந்து நாகரிகம் வரை

பதினோராம் வகுப்பு

## சான்றுகள்

- ஹரப்பா மக்கள் ஓர் எழுத்து முறையைப்பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அதன் பொருளை இன்றளவும் அறிய முடியவில்லை.
- கருகிய விதைகள், மகரந்தங்கள், கல்லாகிப்போன தாவரங்கள் (பைட்டோலித்) ஆகிய தாவரச் சான்றுகள் கற்கால மக்கள் மேற்கொண்ட வேளாண்மை சார்ந்த அறிவைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.
- வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் (Palaeolithic) எனப்படுகிறது. மூன்றாகப்பிரிக்கப்படுகிறது.

கீழ்ப்பழங்கற்காலம் (Lower Palaeolithic)

இடைப்பழங்கற்காலம் (Middle Palaeolithic)

மேல் பழங்கற்காலம் (Upper Palaeolithic)

## கீழ்ப்பழங்கற்காலம் (Lower Palaeolithic)

- பழங்கற்காலக்கற்கருவிகளின்ஆக்கம், அதற்கான உழைப்பு ஆகியவற்றின்அடிப்படையில் அக்காலப்பண்பாடு தொடக்க கால அச்சூலியன், இடைக்கால அச்சூலியன் பிற்கால அச்சூலியன்என மூன்று வகைகளாகப்பிரிக்கப்பட்டுள்ளது.
- பன்முகம் கொண்ட கோள வடிவம் கொண்ட பொருள்கள், கைக்கோடாரி, வெட்டுக்கத்திகள், செதுக்கும் கருவிகள் ஆகியவை தொடக்ககால அச்சூலியன் மரபில் அடங்கும்.
- மேற்குத்தொடர்ச்சி மலை, கடற்கரைப்பகுதிகள், வடகிழக்கு இந்தியா ஆகிய இடங்களில் அச்சூலிய மரபுக்கான அடையாளங்கள் காணப்படவில்லை. பெருமழை இதற்குக் காரணமாக இருக்கலாம்.
- சென்னைக்கு அருகில் உள்ள அதிரம்பாக்கம், பல்லாவரம், குடியம், கர்நாடகாவின் ஹன்ஸ்கி சமவெளியில் உள்ள இசம்பூர், மத்தியப்பிரதேசத்தில் உள்ள பிம்பெட்கா ஆகியவை அச்சூலிய கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ள வேறு சில இடங்களாகும்

எக்கஸ் - குதிரை கழுதை, வரிக்குதிரை ஆகிய விலங்குகளை உள்ளடக்கிய பேரினம்

### ஹோமினின் மற்றும் விலங்குகளின் புதைபடிவங்கள்

- தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையர் ஹோமினின்(Hominin) என்று அழைக்கப்படுகிறார்கள்.
- வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிகளவில் காணப்படுகின்றன.
- அதிரம்பாக்கத்தில் ஹோமினின் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கொள்ளத்தக்க புதை படிவத்தின் ஒரு

பகுதியை இராபர்ட் புரூஸ்ஃபூட் கண்டெடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

- புதைபடிவம் தற்போது எங்கு இருக்கிறது என்று அறிய முடியவில்லை. இந்தியாவில் நன்கு அறியப்பட்ட ஹோமினின்புதைபடிவம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹோசங்காபாத் அருகேயுள்ள ஹத்னோராவில் கண்டுபிடிக்கப்பட்டதாகும்.
- ஒரு மண்டையோட்டின் மேல் பகுதி. இதை 'நர்மதைமனிதன்' என்று தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.
- ஆர்க்கைக் ஹோமோ சேப்பியன்ஸ் என்னும் மனித இனம் வாழ்ந்ததற்கான அடையாளமாக இது கருதப்படுகிறது.
- மனித மூதாதையரின் புதை படிவங்கள் என்ற வகையில் தற்போது இந்தியாவில் இருக்கிற ஒரே புதை படிவம் இது மட்டுமே.
- கீழ்ப்பழங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் விலங்குகளை வேட்டையாடியும் கிழங்குகள், கொட்டைகள் , பழங்கள் ஆகியவற்றைச் சேகரித்தும் வாழ்ந்தனர்.

## இடைப் பழங்கற்காலம் (Middle Palaeolithic Culture)

- 4,00,000 ஆண்டுகளுக்கு முன்பான காலப்பகுதியில் கற்கள் தொடர்பான தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன.
- மனித மூதாதையர்களிடத்தும் பிரிவுகள் தோன்றின. இக்காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் ஹோமோஎரக்டஸ் வகையினர்.
- மனிதர்கள் தற்போது கொண்டுள்ள உடலமைப்புக் கூறுகளுடன் ஏறத்தாழ

**மெஹர்காரில் தொடக்க கால பல்மருத்துவம்** : மனித மூதாதையருக்கு மருத்துவக் குணம் கொண்ட மூலிகைகள் குறித்த அறிவு இருந்திருக்கிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து அவர்களால் தங்களது உடல்நலத்தைப் பராமரிக்க முடிந்தது. வாழ்க்கைமுறை மாறியபோது புதிய நோய்கள் தோன்றின. அவற்றுக்கான மருந்துகளைக் கண்டறிய வேண்டியிருந்தது.



புதியகற்கால களிமண் வீடு – மெஹர்கார்

புதிய கற்காலத்திலிருந்து மக்கள் அரைத்த தானியங்களையும் சமைத்த உணவுகளையும் உண்ணத் தொடங்கினார்கள். இது பல் கோளாறுகளுக்கும் பிற உடல் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்தது. உயிருள்ள ஒரு மனிதரின் பல்லில் துளையிட்டதற்கான மிகப் பழமையான சான்று மெஹர்காரில் கிடைத்துள்ளது. இது பல்மருத்துவத்துக்கான ஒரு முகவுரையாகத் தோன்றுகிறது.

மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியதாகக் கருதப்படுகிறது.

- இந்தியாவில் இடைப்பழங்கற்காலக் கட்டத்தை நெவாசா என்னுமிடத்தில் பிரவாரா ஆற்றங்கரையில் ஹெச். டி.சங்கலியா என்ற தொல்லியலாளர் முதலில் அடையாளம் கண்டார்.

**மேல் பழங்கற்கால வழிபாட்டுத்தலம்** : மேல் பழங்கற்காலத்தைச் சேர்ந்த ஒரு வழிபாட்டுத்தலமாக இருந்திருக்கலாம் என கருதத்தகுந்த ஒரு சிறு கட்டுமானம் உத்தரப்பிரதேசத்தில் உள்ள பாகோர் என்னுமிடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. செதுக்கப்படாத கற்களால் வட்ட வடிவில் சூழப்பட்ட ஒரு மணற்பாறையின் பாளம் இங்கு காணப்படுகிறது. இது தற்கால வழிபாட்டுத்தலங்களை ஒத்திருக்கிறது. இந்தியாவில் வழிபாட்டுத்தலங்களுக்கான தேடலில் கிடைத்த மிகப் பழமையான சான்று இதுதான்.



முக்கோண வடிவிலான கற்கள்– மேல் பழங்கற்கால வழிபாட்டுத்தலம்



இதேபோன்ற கல்–சமகாலத்தைய வழிபாட்டுத்தலம்

## மேல்பழங்கற்காலப் பண்பாடு (Upper Palaeolithic Culture)

- இடைப் பழங்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுப் படி நிலை மேல் பழங்கற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.
- ஏறத்தாழ 3 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆப்பிரிக்காவின் சகாரா பாலைவனப்பகுதிக்கு அருகே தோன்றிய நவீன மனிதர்கள் ஏறத்தாழ 60 ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாவின்பல்வேறு பகுதிகளுக்குப் பரவினர்.

- சிந்து நாகரிகம் உச்சத்தில் இருந்த போது தமிழ்நாட்டில் நுண் கற்கருவிகளைப் பயன்படுத்தும் வேட்டையாடி-சேகரிப்பாளர்கள் வாழ்ந்தார்கள்.
- புதிய கற்காலத்தில் வேளாண்மை செய்வதும் கால்நடைகளை மேய்ப்பதுமாக இருந்த மக்கள் ஆந்திரா-கர்நாடகா பகுதியில் வசித்தார்கள்.

## 1.4 சிந்து நாகரிகம்

இந்தியாவில் முதற்கட்ட நகரமயமாக்கத்தின் சின்னம் சிந்து நாகரிகமாகும்.

### பெயரிடு முறையும் படிநிலைகளும் காலவரிசையும்

- இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலும் பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு. 3000 கால அளவில் தோன்றிய நாகரிகங்களும் பண்பாடுகளும் மொத்தமாகச் சிந்து நாகரிகம் எனப்படும்.
- இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால், இது ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஏறத்தாழ பொ.ஆ.மு. 7000 (புதிய கற்காலப்பகுதியான மெஹர்காரின் காலத்தைப் போல) எனக் கணிக்கப்படுகிறது.
- ஹரப்பா நாகரிகம் பல்வேறு கட்டங்களாகப் பின்வருமாறு பிரிக்கப் பட்டுள்ளது.
- தொடக்ககால ஹரப்பா பொ.ஆ.மு. 3000-2600
- முதிர்ச்சி அடைந்தஹரப்பா பொ.ஆ.மு. 2600-1900
- பிற்கால ஹரப்பா பொ.ஆ.மு. 1900-1700
- ஹரப்பாவுக்கு முதன்முதலில் பொ.ஆ. (கி.பி) 1826இல் வருகை தந்தவர் சார்லஸ் மேசன்.
- 1831இல் அம்ரி என்னும் ஹரப்பா பண்பாட்டோடு தொடர்புடைய இடத்திற்கு அலெக்ஸாண்டர் பர்ன்ஸ் வருகைதந்தார்.
- லாகூரிலிருந்து முல்தானுக்கு ரயில் பாதை அமைப்பதற்காக ஹரப்பா அழிக்கப்பட்டது.
- இப்பகுதியிலிருந்து ஒரு முத்திரை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் முதல் அளவையரான அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாமுக்குக் கிடைத்தது. 1853இலும் 1856இலும் 1875இலும் அவர் ஹரப்பாவைப் பார்வையிட்டார்.
- ஹரப்பாவின்முக்கியத்துவத்தையும் அதன்நாகரிகத்தையும் உணர்ந்து, அங்கு ஆய்வு நடத்தக்காரணமாக இருந்தவர் சர் ஜான்மார்ஷல் ஆவார். இவர் இந்தியத் தொல்லியல் துறையின் இயக்குனராகப் பொறுப்பேற்ற நிகழ்வு, இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனை எனலாம். இவரது முயற்சிகள் மூலம் ஹரப்பாவில் ஆய்வுகள் தொடங்கப்பட்டன.
- 1940களில் ஆர்.இ.எம். வீலர் ஹரப்பாவில் அகழாய்வுகள் நடத்தினார்.

### புவியியல் அமைவிடமும் குடியிருப்புகளும்

- சிந்து நாகரிகமும் அதன் சம காலப் பண்பாடுகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக மொத்தம் 1.5 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன.
- மேற்கில் பாகிஸ்தான்– ஈரான் எல்லையில் அமைந்துள்ளசட்காஜென்டர் குடியிருப்புகள்.
- வடக்கில் ஷார்ட்டுகை(ஆப்கானிஸ்தான்).
- கிழக்கில் ஆலம்கிர்புர் (உத்தரப்பிரதேசம்)
- தெற்கில் தைமாபாத் (மகாராஷ்டிரம்) எனச் சிந்து நாகரிகப் பகுதியின் எல்லைகள் வரையறுக்கப் பட்டுள்ளன.
- இதன்மையப்பகுதிகள் பாகிஸ்தானிலும் இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களிலும் உள்ளன.

## தொடக்கம்

- உலகில் வேளாண்மையும் விலங்கு வளர்ப்பும் மிக முன்பே தொடங்கி விட்ட பகுதிகளில் சிந்து பகுதியும்(மெஹர்கார்) ஒன்று.
- முதிர்ந்த ஹரப்பா பண்பாட்டுக்கட்டத்தில் நகரமையங்கள் தோன்றின.

## திட்டமிடப்பட்ட நகரங்கள்

- ஹரப்பா(பஞ்சாப், பாகிஸ்தான்)
- மொகஞ்சதாரோ(சிந்து, பாகிஸ்தான்)
- டோலவிரா, லோத்தல், சுர்கோட்டடா (குஜராத், இந்தியா), காலிபங்கன்(ராஜஸ்தான், இந்தியா),
- பனவாலி, ராக்கிகார்ஹி (ஹரியானா, இந்தியா),
- சர்கோட்டடா (குஜராத், இந்தியா) ஆகியவை ஹரப்பா கால முக்கிய நகரங்களாகும்.
- அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை, நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவு நீர் வசதி ஆகியவை ஹரப்பா நகரங்களின் குறிப்பிடத்தக்க கூறுகள்.
- தகுந்த குடிமை அதிகாரிகளின் கீழ் இத்தகைய திட்டமிடல் நிகழ்ந்திருக்கக்கூடும்.
- ஹரப்பாமக்கள் கட்டுமானத்துக்குச் சுட்ட, சுடாதசெங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தினர்.
- நகரங்கள் சட்டக வடிமைப்பைக் கொண்டிருந்தன.
- கழிவுநீர் வடிகால்கள் திட்டவட்டமான ஒழுங்குடன் கட்டப்பட்டன.
- வீடுகள் சேற்று மண்ணாலான செங்கற்களாலும் கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டன.
- வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களைக் கொண்டிருந்தன.
- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப் பட்ட நகரம். கோட்டைப் பகுதியாகவும் தாழ்வான நகரமாகவும் இரு வேறுபட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது.
- வீடுகளில் சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலும் இருந்தன.
- மேல்தளம் இருந்ததை உணர்த்தும் வகையில் சில வீடுகள் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன. வீடுகளில் பல அறைகள் இருந்தன. பல வீடுகளில் சுற்றிலும் அறைகளுடன்கூடிய முற்றம் அமைந்திருந்தது.

- நகரத்தின் கோட்டைப்பகுதி முக்கியத்துவம் வாய்ந்தஇருப்பிடத்துக்கான அமைப்புகளுடன் காணப்படுகிறது.
- இதைப் பொதுமக்களோ, மக்களில் குறிப்பிட்ட சிலரோ பயன் படுத்தியிருக்கலாம். மொகஞ்சதாரோவில் உள்ள ஒரு கட்டிடம் சேமிப்புக் கிடங்காக அடையாளம் காணப்படுகிறது.
- பெரும் குளம் (The Great Bath) என்பது முற்றத்துடன்கூடிய ஒரு பெரிய குளமாகும். குளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள நடைபாதை வடக்குப் பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலும் படிக்கட்டுகளுடன்அமைந்துள்ளது. நடைபாதையின் அருகே பல அறைகளும் உண்டு.
- சில கட்டுமான அமைப்புகள் தானியக்கிடங்குகளாக அடையாளம் காணப்படுகின்றன. அதன் சுவர்கள் ஜிப்சம் செறிந்த சுண்ணச்சாந்தால் பூசப்பட்டு, நீர் புகாதபடி இருக்கின்றன. அக்கட்டுமானத்தில் கழிவுநீர் வடிகால் வசதி இருந்தது. பெருங்குளம் சடங்குகளுடன் தொடர்புடைய நீராடல் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

## வாழ்வாதாரமும் பொருளாதார உற்பத்தியும்

- ஹரப்பா மக்கள் நிலையாக வாழ்வதற்கு வேளாண்மை முக்கிய ஆதாரமாக விளங்கியது.
- கோதுமை, பார்லி, அவரை வகைகள், கொண்டைக்கடலை, எள், வெவ்வேறு தினை வகைகள் உள்ளிட்ட பல்வேறு பயிர்களைப் பயிரிட்டார்கள். ஹரப்பா மக்கள் இரட்டைப்பயிரிடல் முறையைப் பின் பற்றினார்கள்.
- ஹரப்பா மக்கள் உழவுக்குக் கலப்பையைப் பயன்படுத்தினார்கள். நிலத்தைஉழுது, விதைக்கும் வழக்கத்தைஅவர்கள் கொண்டிருந்திருக்கலாம். உழுத நிலங்களைக் காலிபங்கனில் காண முடிகிறது.
- பாசனத்துக்குக் கால்வாய்களையும் கிணறுகளையும் பயன்படுத்தினார்கள்.

## விலங்குகளைப் பழக்கப்படுத்துதல்

- ஹரப்பாவில் மேய்ச்சலும் ஒரு முக்கியமான தொழிலாக இருந்தது. செம்மறியாடு, வெள்ளாடு, கோழி உள்ளிட்ட பறவைகளைவளர்த்தார்கள். எருமை, பன்றி, யானை போன்ற விலங்குகள் குறித்தஅறிவும் அவர்களுக்கு இருந்தது.
- ஹரப்பா மக்களின் உணவில் மீன், பறவை இறைச்சி ஆகியவையும் இருந்தன.
- காட்டுப்பன்றி, மான், முதலை ஆகியவற்றுக்கான சான்றுகளும் ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் கிடைத்துள்ளன.

## கைவினைத் யாரிப்பு

- ஹரப்பா பொருளாதாரத்தில் கைவினைத் தயாரிப்பு ஒரு முக்கியமான பகுதியாகும்.
- மணிகள் மற்றும் அணிகலன்செய்தல், சங்கு வளையல் செய்தல், உலோக வேலைகள் ஆகியவைகைவினைச் செயல்பாடுகளாக இருந்தன. கார்னிலியன்(மணி), ஜாஸ்பர், கிரிஸ்டல் (படிகக்கல்), ஸ்டீட்டைட்(நுரைக்கல்)

ஆகியவற்றிலும் செம்பு, வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களிலும் சங்கு, பீங்கான், சுடுமண் ஆகியவற்றிலும் அணிகலன்களைச் செய்தார்கள்.

- அணிகலன்கள் எண்ணற்ற வடிவமைப்பிலும் வேலைப்பாடுகளுடனும் செய்யப்பட்டன.
- மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து கலைப்பொருள்கள் ஏற்றுமதி ஆன செய்தி மெசபடோமியாவில் நடத்தப்பட்ட அகழாய்வு மூலம் தெரிகிறது

வைடூரியம் - ஷார்ட்டுகை

கார்னிலியன் - லோத்தல்

ஸ்டீட்ரைட் - தெற்கு ராஜஸ்தான்

செம்பு - ராஜஸ்தான் ஓமன்

ரோரி செர்ட் : இந்த படிவுப் பாறை பாகிஸ்தானில் உள்ள ரோரி பகுதியில் காணப்படுகிறது. ஹரப்பா மக்கள் கத்திகளும் பிற கருவிகளும் செய்வதற்கு இது பயன்பட்டது.

## உலோகங்களும் கருவிகளும் ஆயுதங்களும்

- ஹரப்பா நாகரிகம் வெண்கலக்கால நாகரிகமாகும் செம்பு வெண்கலக் கருவிகள் செய்யஅறிந்தவர்கள்.
- வெண்கலக் கருவிகளைத் தயாரித்தாலும், வேளாண்மைக்கும் கைவினைப் பொருள்கள் உற்பத்திக்கும் பலவகைப்பட்ட கருவிகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன.
- ரோரிசெர்ட் எனப்படும் படிகக்கல்லில் செய்யப்பட்ட கத்திகளை ஹரப்பா மக்கள் பயன்படுத்தினார்கள்.

## உலோகங்களும் அணிகலன்களும்

- ஹரப்பா மக்கள் துணியாலான ஆடைகளை அணிந்தார்கள்.
- கல்லாலும் உலோகங்களாலுமான அணிகலன்களைப்பயன்படுத்தினார்கள். பருத்தி, பட்டு ஆகியவை குறித்தஅறிவு இருந்தது.
- ஒரு சுடுமண் பொம்மையில் மதகுரு போல் தோற்றமளிக்கும் உருவம் துணியாலான, பூ வேலைப்பாடுகள் கொண்ட மேலாடையை அணிந்துள்ளதைக் காண்கிறோம்.
- மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட 'நடனமாடும் பெண்' சிலையின், முழங்கையின் மேல் பகுதி வரை வளையல்கள் காணப்படுகின்றன.

## வணிகமும் பரிவர்த்தனையும்

- ஹரப்பாவின் பொருளா தாரச் செயல்பாடுகளில் வணிகமும் பரிவர்த்தனையும் முக்கியப்பங்கு வகித்தன.
- ஹரப்பா மக்களுக்கு மெசபடோமியோவுடன் நெருக்கமான வணிகத் தொடர்பு இருந்தது.
- இந்தியாவில் பிற பண்பாடுகளைச் சேர்ந்த மக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
- சுமேரிய நாகரிகம் நிலவிய ஓமன், பஹ்ரைன், ஈராக், ஈரான் ஆகிய இடங்களில் ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகளும் பொருள்களும் கிடைத்துள்ளன.

- க்யூனிபார்ம் கல்வெட்டுக்குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.
- அவற்றில் காணப்படும் 'மெலுகா' என்னும் சொல் சிந்து பகுதியைக்குறிக்கிறது. ஹரப்பாவில் செய்யப்பட்ட ஜாடி ஓமனில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகள், எடைக்கற்கள், தாயக்கட்டைகள், மணிகள் மெசபடோமியாவில் கண்டெடுக்கப்பட்டன.

## எடைக்கற்களும் அளவீடுகளும்

- ஹரப்பா நாகரிகப்பகுதிகளிலிருந்து படிகக் கல்லாலான, கனசதுரவடிவ எடைக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எடைக்கற்கள் இரும முறையை உணர்த்துகின்றன.
- எடையின் விகிதம் இரு மடங்காகும்படி பின்பற்றப்பட்டுள்ளது - 1:2:4:8:16:32. 16 – இன்விகிதம் கொண்ட சிறிய எடைஅளவீடு இன்றைய அளவீட்டில் 13.63 கிராம் கொள்ளத்தக்கதாக உள்ளது.
- ஹரப்பாமக்கள் இன்றைய அளவீட்டில் ஒரு இஞ்ச் = 1.75செ.மீ ஆகக்கொள்ளும்விதத்தில் அளவுகோலையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.
- இரும எண் முறையை(1,2,4,8,16,32,.....) பின்பற்றினார்கள்.

## முத்திரைகளும் எழுத்துமுறையும்

- ஸ்டீட்டைட், செம்பு, சுடுமண், தந்தம் போன்றவற்றாலான முத்திரைகள் ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் அதிகளவில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- 5000க்கும் மேற்பட்ட எழுத்துத் தொடர்கள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. ஹரப்பாவில் கிடைத்த வற்றில் மிக நீளமானதாகக் கருதப்படும்
- எழுத்துத்தொடர் 26 குறியீடுகளைக் கொண்டுள்ளது. பல அறிஞர்கள் அது திராவிடமொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாகக்கருதுகிறார்கள்.

போக்குவரத்துக்கு உட்படும் பொருள்கள் மீது குறியிட்டு அடையாளப்படுத்துவதற்காக முத்திரைகள் பயன்பட்டிருக்கலாம்.

## கலையும் பொழுதுபோக்கும்

- ஹரப்பா நாகரிகப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் சுடுமண் உருவங்கள் , மடபாண்டங்களில் காணப்படும் ஓவியங்கள், வெண்கல உருவங்கள் ஆகியவை ஹரப்பா மக்களின் கலைத் திறனை உணர்த்துகின்றன.
- பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், சக்கரங்கள், பம்பரங்கள், சதுரங்க விளையாட்டில் பயன்படுத்தப் படுவதைப் போன்ற காய்கள், கட்டங்கள் வரையப்பட்ட பலகைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்குச் சான்றாகும்.

## நம்பிக்கைகள்

- சிந்து மக்கள் இயற்கையை வழி பட்டார்கள் .
- அரசமரங்கள் வழிபாட்டுக்குரியதாக இருந்திருக்கலாம்.

- சுடுமண்உருவங்கள் தாய்த்தெய்வத்தைப் போல் உள்ளன.
- காலிபங்கனில் வேள்வி பீடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஹரப்பாமக்கள் இறந்தோரைப் புதைத்தனர். புதைப்பதற்கான நடைமுறைகள் விரிவாக இருந்தன. இறந்த உடல்களை எரித்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.
- ஹரப்பா புதைகுழிகளில் மட்பாண்டங்கள், அணிகலன்கள், தாமிரக்கண்ணாடி, மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன.

அரசியல் முறை

- அதிகாரம் படைத்த ஆட்சியமைப்பால் இத்தேவை நிறைவேற்றப் பட்டிருக்கலாம்.
- ஹரப்பாவும் மொஹஞ்சதாரோவும் நகர அரசுகளுக்கான ஆட்சியமைப்பின் கீழ் இயங்கியிருக்கலாம்.
- பண்பாட்டுப் பொருள்களிலும் அளவீடுகளிலும் காணப்படும் சீரான தன்மை ஹரப்பா சமூகம் உறுதியான மைய நிர்வாகத்தின் கீழ் இயங்கியிருக்க வேண்டும்.

நாகரிகத்தை உருவாக்கியவர்களும் இந்தியப் பண்பாட்டின் உருவாக்கமும்

- ஹரப்பா நாகரிகத்தைப் உருவாக்கியவர்கள் திராவிட மொழிகளைப் பேசியவர்கள் என ஆராய்ச்சியாளர் தரப்பு தெரிவிக்கிறது.
- தங்கள் நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஹரப்பா மக்கள் கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் இடம்பெயர்ந்ததைத் தொல்லியல் சான்றுகள் காட்டுகின்றன.

சிந்துநாகரிகமும் சமகாலப் பண்பாடுகளும்

- மேய்ச்சல் சமூக மக்கள், வேளாண்மை செய்வோர், வேட்டையாடிகள்-உணவு சேகரிப்பாளர்கள் போன்றோரை உள்ளடக்கிய பல குழுக்கள் சிந்து பகுதியில் வசித்தன.
- இச்சமூகங்களின்பண்பாடும் சூழலியல் அறிவும் இந்தியப் பண்பாட்டுக்குப் பங்களிப்பு செய்துள்ளன.
- இந்தியாவின்வடமேற்குப்பகுதியில் சிந்து நாகரிகம் செழிப்புற்றிருந்தபோது,
- படகுப் போக்குவரத்து குறித்த அறிவுடன் இருந்த ஹரப்பா மக்கள் தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அதற்குத் தெளிவான தொல்லியல் சான்றுகள் கிடைக்கவில்லை.
- தென்னிந்தியாவின் வடபகுதி, குறிப்பாகக் கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம் ஆகியவை புதிய கற்காலப் பண்பாடுகளுடன், மேய்ச்சல் மற்றும் கலப்பை சார்ந்த வேளாண்மையிலும் ஈடுபட்டு வந்தன.
- புதிய கற்காலப் பண்பாடு காஷ்மீர், கங்கைச் சமவெளி ஆகிய வடஇந்தியப் பகுதிகளிலும் மத்திய இந்தியாவிலும் கிழக்கு இந்தியாவிலும் பரவியிருந்த போது தக்காணத்திலும் மேற்கு இந்தியாவிலும் செம்புக்காலப்பண்பாடு நிலவியது.

வீழ்ச்சி

- ஏறத்தாழ பொ.ஆ.மு. 1900இல் சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்தது. காலநிலைமாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, தொடர் வறட்சியின் காரணமாக ஆறுகள் மற்றும் நீர்

நிலைகள் காய்ந்து வற்றிப் போதல் ஆகியவை வீழ்ச்சிக்கான காரணங்களாக வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன.

- சிந்து நாகரிகத்தின்அழிவுக்குப்படையெடுப்பு, வெள்ளம், ஆறு தன் போக்கை மாற்றிக் கொண்ட நிகழ்வு ஆகிய காரணங்களும் முன் வைக்கப்படுகின்றன.
- காலப் போக்கில் இம்மக்கள் சிந்து பகுதியிலிருந்து தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் இடம் பெயர்ந்தார்கள்.

**சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும்**




இந்திய வரலாற்றில் நிகழ்ந்த முதல் நகரமயமாக்கத்தின் வெளிப்பாடு சிந்து நாகரிகமாகும்.

சிந்து நாகரிகத்தின் தோற்றமும் தோற்றுவித்தவர்கள் குறித்த செய்திகளும் விவாதத்துக்கு உரியனவாகவே உள்ளன. சிந்து எழுத்துகளின் பொருளை இன்னும் கண்டறிய முடியவில்லை. தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகளில் மெல்லிய கீறல்களாக எழுதப்பட்ட வாசகங்களும் சில இடங்களின் பெயர்களும் சிந்து நாகரிகத்துக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் இடையேயான உறவை நிறுவுவதற்கான சான்றுகளாக முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இடைக்கற்காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன. இவர்களில் சில சமூகங்கள் சிந்து பகுதியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்பதை மறுக்க முடியாது. எனினும் உறுதியானதொரு முடிவுக்கு வர இன்னும் அதிக ஆய்வுகள் தேவை.

பழந்தமிழகத்தைச் சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உறையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.

## அலகு - 2 சிந்துவெளி நாகரிகம்

## பதினொன்றாம் வகுப்பு -அறவியலும் பண்பாடும்

- உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நாகரிக நகர அமைப்பு, கட்டடக்கலை, சமூகம், சமயம், பொருளாதாரம், வணிகம் ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதைப் பல அகழாய்வு சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.
- இந்தியாவில் தோன்றிய பழைமையான நாகரிகம், 'சிந்துவெளி நாகரிகம்'. சிந்துநதிக் கரையில் செழித்து வளர்ந்த'நகர நாகரிகம்' ஆகும். இது, சிந்து ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்தமையால் 'சிந்துவெளி நாகரிகம்' என்று அழைக்கப்படுகிறது.
- சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழைமையான இந்நகர நாகரிகம், முதன்முதலில் 1921 இல் கண்டறியப்பட்டது. பழைய பஞ்சாபின் மாண்ட்கொமரி மாவட்டத்தில் (பாகிஸ்தான்) ராவி-சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட(1920) தொல்பொருள் சின்னம் 'ஹரப்பா' எனப்படுவதாகும்.
- 1922 ஆம் ஆண்டு, சிந்து மாகாணத்தில் (பாகிஸ்தான்) லர்க்கானா மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இச்சின்னத்தை 'மொகஞ்சதாரோ' என்பர்.
- இந்தஅகழ்வாய்வினைமேற்கொண்டதொல்லியலாளர் 'சர் ஜான் மார்ஷல்'. இவர் தொல்பழங்காலத்திலேயேசிறப்புற்று விளங்கிய திராவிடநாகரிகத்துடன் சிந்துவெளி நாகரிகத்தைஒப்பிடுகிறார்.
- இவரின் கூற்றுப்படி, இந்தநாகரிகம் வேதகாலத்திற்கு முற்பட்டதாகஉள்ளது எனவும், இதன் காலம் கி.மு. (பொ.ஆ.மு.) 3250 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 2750 வரைஎனவும் குறிப்பிட்டுள்ளார். இதைப் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள்ஏற்றுக் கொண்டுள்ளனர்.

- சாகுந்தாரோ, கோட்டிஜி, லோத்தல், காளிபங்கன் போன்றஇடங்களில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழாய்வுகள்.

### சான்றுகள்

- மக்கள் பயன்படுத்திய முத்திரைகள், மட்பாண்டங்கள், நீர் அருந்தும் குவளைகள், மோதிரங்கள், சுடுமண் பொம்மைகள், மணிகள், உலோகவளையல்கள், இரத்தினக்கற்கள்மற்றும் கட்டடச் சிதைவுகள் போன்றவை சிந்துவெளி அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

### சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்

- தற்போது தென் கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்தபகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்றஇடப்பெயர்கள்தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வழக்கத்தில் உள்ளன.

- தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்தபகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வழக்கத்தில் உள்ளன.

- தமிழ்நாட்டிலுள்ளஆலூர், ஆதூர், படூர், இஞ்சூர், குந்தா, நாகல், தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன.

- பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிடமொழி இன்று வரை பேசப்பட்டு வருகிறது. தமிழ்பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும்.

- பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது.

### குடிமக்கள்

- திராவிடர்கள், மத்தியத் தரைக்கடல் இனத்தினர், முந்தைய ஆஸ்ட்ரோலாய்டுகள், ஆல்பைன்கள்மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் சிந்துவெளிப் பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- திராவிடர்களாகத் தான் இருக்கவேண்டும் என்பது சர் ஜான் மார்ஷல், ஆர். டி. பானர்ஜீ, ஹீராசு பாதிரியார் போன்றோர்களின் கருத்தாகும்.

- சிந்துவெளியில் பேசப்பட்டு வந்தமொழி, பண்டைய தமிழ்மொழியே என்பதும் அவர்களது கருத்தாகும்.

- பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள்(கிரேக்கர்கள்), இந்நாட்டைத் 'திரிமிளிகே' என்று அழைத்தனர்.

- காஞ்சியைஆட்சி செய்த நந்திவர்மபல்லவன் தமிழ் அரசர்களை 'திராவிட மன்னர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

- கங்காதேவி என்பவர் தாம் எழுதிய 'மதுரா விஜயம்' என்ற நூலில் தமிழ்நாட்டைத் 'திராவிடதேசம்' என்றும், தமிழ் மன்னர்களை'திரமிள ராஜாக்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

- பழங்காலந் தொட்டே'தமிழ்' என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

- சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள்ஆய்வைமேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்

- லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) அது 'நகர நாகரிகம்' என்பதைஉறுதி செய்தார்.

- ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்சநிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்த போது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

கீழடி தொல்லியல் களம் என்பது இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு செய்யப்பட்டு வரும் ஒரு சங்ககால வசிப்பிடம் ஆகும் இந்த அகழாய்வு மையம் தமிழ்நாட்டின் மதுரைக்கு தென்கிழக்கில் 12 கிலோமீட்டர் தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்கு அடுத்து இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும்.

### நகர அமைப்பு

- நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், நேராகவும், சுகாதார வசதி கொண்டனவாகவும் அமைக்கப் பட்டிருந்தன.

- தெருக்கள் கிழக்கு மேற்காகவும், வடக்குத் தெற்காகவும் அமைந்திருந்தன.
- பெரிய தெருக்கள்33 அடி அகலமும், சிறிய தெருக்கள் 9 அடி முதல் 12 அடி வரை அகலம் கொண்டதாகவும் இருந்தன.
- பெரிய தெருக்களில் மக்கள் நடந்து செல்லும் நடை பாதையும் இருந்தது. மூன்று வண்டிகள் ஒரே வரிசையில் செல்லும் வகையில் பெரிய சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன.
- இதைப் பார்க்கும் போது, பாபிலோனிய நகரங்களை விஞ்சிய சிறந்த நகரமைப்பைச் சிந்துவெளி மக்கள் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம்.

## கட்டடக்கலை

- சிந்துவெளியில் ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன
- அவற்றின் உள்ளே மன்னரின் மாளிகைகளும், பெரிய நீராடும் குளங்களும், நெற்களஞ்சியங்களும் மேடான சாலைகளும் இருந்தன.
- மேற்குத் திசையில் மேடான நிலத்தில் கோட்டையும், கிழக்கே குடியிருப்புப் பகுதியும் அமைந்திருந்தன.
- ஒவ்வொரு வீடும் பல அடுக்கு மாடிகளைக் கொண்டதாக இருந்தது.
- கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செங்கற்கள் மிகவும் உறுதியாக இருந்தன.
- கிணற்றுச்சுவர், சாக்கடைச்சுவர் போன்ற வளைந்த சுவர்களைக் கட்டுவதற்கு ஆப்பு வடிவச் செங்கற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

## நீச்சல் குளம்

- செங்கற்களால் கட்டப்பட்ட நீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளத்தின் தரைப் பகுதி நீரைஉறிஞ்சாமல் இருப்பதற்காக, 'நீலக்கீல்' (Bitumen) என்ற பசையால் பூசப்பட்டிருந்தது.
- மக்கள், குளித்த பின்பு உடையை மாற்றிக் கொள்வதற்குக் குளத்தின் மேல் ஓரங்களில் பல அறைகள்இருந்தன.
- குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன.
- நீச்சல் குளத்திற்குள் சென்று வர நுழைவாயில்கள் இருந்தன. நீச்சல் குளத்தின் தென் மேற்கு மூலையில் நீராவிப் பயன்பாட்டிற்கு வசதி செய்யப்பட்டிருந்தது.

## தானியக்களஞ்சியம்

- எதிர்காலத் தேவையைமுன்னிட்டு உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருந்தனர். இதற்கு ஹரப்பாவில் இருக்கும் தானியக்களஞ்சியமே சான்றாகும்.

- இது 168 அடி நீளமும், 135 அடி அகலமும் உடையது. இதன் சுவர்கள்52 அடி உயரமும், 9 அடி கனமும் உடையவை.

- இரண்டு வரிசைகளாகக்கட்டப்பட்டு இருந்தன. இவ்விரண்டு வரிசைகளுக்கிடையேஉள்ளதூரம் 23 அடியாகும். இவ்விரு நெடுஞ்சுவர்களுள் ஒவ்வொரு வரிசையிலும் ஆறு மண்டபங்கள் இருந்தன.

- ஒவ்வொரு மண்டபத்திலும் மூன்று பெருஞ்சுவர்கள்எழுப்பப்பட்டன. அதில் நான்கு அறைகள் இருந்தன. இம்மண்டபத்தின் தரைப்பகுதி மரப்பலகையால் ஆனது. பல அறைகள் கொண்ட இத்தானியக் களஞ்சியத்தில் உணவு தானியங்கள் மட்டுமே சேமிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### சமுதாய நிலை

- சிந்துவெளியில் பல்வேறு தொழில் செய்வோர் இருந்தனர். அவர்களுள், கட்டடம் கட்டுவோர், நெசவாளர், சிற்பி, ஓவியர், தட்டார், தச்சர் முதலிய கைவினைஞர்கள் இருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள்உள்ளன.

- வீட்டு வேலைக்காரர்கள், கூடை முடைவோர், விவசாயம் செய்வோர், மீன் பிடிப்போர் இங்கு வாழ்ந்துள்ளனர்.

- சிந்துவெளி மக்கள்விவசாயம் மற்றும் வாணிகம் செய்து வசதியுடன் வாழ்ந்தனர் என்பதைஅறிய முடிகிறது.

### பெண்களின் நிலை

- சிந்துவெளியில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள்மதிக்கப்பட்டனர். இவர்கள், அழகு சாதனப்பொருள்களைப் பயன்படுத்தினர்.

- அதற்குச் சான்றாக வெண்கலத்தால் ஆன முகம் பார்க்கும் கண்ணாடிகள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள் போன்ற பொருள்கள் இங்கு கிடைத்துள்ளன.

- இப்பெண்கள் காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை, கழுத்து மணிகள் போன்ற பல அணிகலன்களையும் அணிந்திருந்தனர்.

### நகர நாகரிகம்

- ஷில்டேஎன்றஅறிஞர் நகர வாழ்க்கையின் கூறுகளாக, அதிகமக்கள்தொகை, பல்வேறு தொழில் புரிவோர், வணிகர்கள், பணியாளர்கள், குடியிருப்புகள், பொதுக்கட்டடங்கள், எழுத்துக்குறியீடுகள், கலைவடிவங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

- நகரில் வணிகர்கள் பெருவாரியாக வாழ்ந்தனர். நகரங்களுக்கு இடையேயான உள்நாட்டு

வணிகமும், வெளிநாட்டு வணிகமும் சிறப்பாகநடைபெற்றுள்ளன.

## சுடுமண் விளையாட்டு பொம்மைகள்

- காளைச்சண்டை, கோழிச்சண்டை, வேட்டையாடுதல், பறவை வளர்ப்பு போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள்.
- கோழிச்சண்டை விளையாட்டு, தமிழகப் பண்பாட்டிலிருந்து சிந்துவெளி மக்களின் பண்பாட்டிற்குப் பரவியுள்ளதைகாணலாம்.

## மருத்துவம்

- சிந்துவெளி மக்கள் கண், காது, தொண்டை, தோல் தொடர்பான நோய்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைச் செய்வதற்குக் கட்டில் (cuttle) என்ற ஒரு வகையான மீனின் எலும்புகளைப் பயன்படுத்தினர்.
- மான், காண்டாமிருகத்தின் எலும்புகள், பவளங்கள், வேப்பந்தழைகள் போன்றவை மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான ஆதாரங்கள்கிடைத்துள்ளன.
- தமிழகத்தில், இன்றும் மருத்துவத்திற்கு வேப்பந்தழை பயன்படுவது குறிப்பிடத்தக்கது.

## இறந்த உடலை அடக்கம் செய்தல்

- சிந்துவெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்வதில் மூன்று வகையான வழிமுறைகளைப் பின்பற்றினர்.
- முதலாவதாக, முழு உடலையும் புதைப்பது. இரண்டாவதாக, எரிந்த உடலின் எஞ்சிய பாகங்களையும் அவர்கள்பயன்படுத்திய பொருள்களையும் சேர்த்து தாழிகளில் வைத்துப் புதைப்பது. இத்தாழிகள், வீடுகளிலோ வீட்டின் அருகிலோ புதைக்கப்பட்டன.
- இறுதியாக, இறந்த உடல்களை ஊருக்குப் புறத்தே திறந்த வெளியில் பறவைகளும், விலங்குகளும் உண்ணும் படி வைத்தனர்.
- எஞ்சிய எலும்புகளை மட்டும் எடுத்துப் பின்னர், மண்தாழிகளில் வைத்து அவற்றுடன் வேறு குடுவைகளில் இறந்தவர் பயன்படுத்திய சில பொருள்களையும் சேர்த்துப் புதைத்தனர்.
- இறந்த உடலை புதைக்கும் போது, அவர்களுக்குப் பிடித்த உணவுப் பொருள்களை வைத்து புதைப்பதும் வழக்கத்தில் இருந்தது. இப்பழக்கம், தமிழகத்தின் பெரும்பகுதிகளில் வழக்கத்தில் இருந்தது என்பது, பல ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இறந்தவர்களை வடக்கு தெற்காகப் புதைக்கும் வழக்கம் சிந்துவெளிக்கும் பண்டைய தமிழகத்திற்கும் பொதுவான நடைமுறையாக இருந்தது.

tnpscbooks

- உருண்டை வடிவம் கொண்ட(Globular) ஈமத்தாழிகள், சிந்துவெளியிலும் தமிழகத்திலும் பயன்படுத்தப்பட்டன.

## பொருளாதார வாழ்க்கை முறை

- சிந்து வெளி நாகரிக மக்கள் நீர் வழிப் பயணம் மேற்கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திலும் ஈடுபட்டனர்.
- உள்நாட்டில் காஷ்மீர், மைசூர், நீலகிரி மலை, கிழக்கு இந்தியா, மேற்கு ஆசியா, மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் வணிகம் செய்தனர்.
- இவர்கள் சுமேரியா, எகிப்து போன்ற வெளிநாடுகளிலும் வணிகத்தில் ஈடுபட்டுப் பொருளீட்டிச் சிறப்பாக வாழ்ந்தனர் என அறிய முடிகிறது.

## விவசாயம்

- வேளாண்மைக்குத் திமிலுடன் இருக்கும் காளைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.
- ஒட்டகங்களும் எருமைகளும், வேளாண்மைக்குப் பயன்பட்டன.
- விவசாயத்திற்குத் தேவையான நீர், சிந்துநதியிலிருந்து பெறப்பட்டது.

## சிந்துவெளி மக்களின் கருவிகள்

- கோடரி, ஈட்டி, வில், அம்பு, கதாயுதம், கவண், கத்தி போன்றஆயுகதங்களைப் போரில் பயன்படுத்தினர். ஈட்டி முனைமிகக் கூர்மையானதாகவும், அகலமானதாகவும் இருந்தது.
- சில வகையான கத்திகள்இருபக்கமும் நன்கு தீட்டப்பட்டிருந்தன.
- வீடுகளுக்குத் தேவையான பாத்திரங்கள்மண், கற்கள், தந்தம், செம்பு, பித்தளைஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன.
- இவர்கள் இரும்பின் பயனைஅறிந்திருக்கவில்லை.

## வணிகம்

- தரைவழிப் போக்குவரத்திற்கு எருதுகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.
- ஆனால், நீர்வழிப் போக்குவரத்தும் வழக்கத்திலிருந்தது. அது சிந்து ஆற்றின் வழியே நடைபெற்றது.
- பண்டைய சிந்துவெளி மக்கள் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, பல நாடுகளுடன் வணிகம் செய்தனர்.
- படகுப் போக்குவரத்தின் மூலம் உள்நாட்டு வணிகம் சிறப்பாகநடைபெற்றது. குறிப்பாக புரோச், காம்பே துறைமுகங்கள் வணிகத்தில் சிறப்புற்று இருந்தன என்பதை அறிய முடிகிறது.

## வழிபாடு

### தாய்த் தெய்வ வழிபாடு

- சிந்துவெளி மக்களின் முக்கிய வழிபாடாகும். ஹரப்பாவில் பெண் உருவம் பொறித்த பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- பிறகு சக்தி வழிபாடாகமாறியது. இன்றும், தமிழகத்தில் பெண்களைத் தெய்வமாக வழிபடும் மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (எகா) பார்வதி, காளி போன்ற தெய்வங்கள் தமிழகத்தில் இன்றும் வணங்கப்படுவதைக் காணலாம்.

பண்டைய திராவிட மக்களுள் பெரும் பகுதியினர் தாய் தெய்வ உரிமை தாய் முறை போன்றவற்றை கடைப்பிடித்தனர். இவற்றின் காரணமாக திராவிட மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு பெரு வழக்காக இருந்தது என சமூகவியல் அறிஞர்கள் கூறுவர்

### பசுபதி வழிபாடு

- ஹரப்பாவில் கிடைத்தமுத்திரைகளில் அமர்ந்த நிலையிலுள்ள மகாயோகியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

- அதில் மூன்று முகங்களை கொண்ட கடவுள், யோக நிலையில் அமர்ந்திருப்பது போலவும், அதனைச் சுற்றி யானை, புலி ஆகியவற்றின் உருவங்கள் வலப்புறமாகவும், காண்டாமிருகம், எருமை ஆகியவற்றின் உருவங்கள் இடப்புறமாகவும் அமைந்துள்ளன.

- வரலாற்று ஆய்வாளர்கள்கூற்றுப்படி, இது சிவனுக்குரிய "திருமுகம்" (மூன்றுமுகம்), பசுபதி(விலங்குகளின் கடவுள்), யோகேசுவரன் (யோகிகளின் கடவுள்) போன்ற பல்வேறு வடிவங்களை உணர்த்துவதாக இவ்வழிபாடுகள் உள்ளன.

### விலங்கு வழிபாடு

- சிந்துவெளி மக்கள்விலங்குகளைத் தெய்வமாகவழிபட்டனர். தமிழகப் பண்பாட்டில் பண்டைய காலம் முதல் இன்று வரை பசு, எருது, புலி, பறவை போன்ற விலங்குகள் சமயச் சின்னங்களாக இருந்து வருவதைக்காணலாம்.

- சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிடப் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதாகஉள்ளது.

### நீர் வழிபாடு

- ஹரப்பா, மொகஞ்சதாரோ நகர மக்கள் ஆற்றங்கரையின் அருகிலேயே வசித்ததன் காரணமாக, நீரைக் கடவுளாகக் கருதி வழிப்பட்டனர்.

- இவர்கள், மொகஞ்சதாரோவில் உள்ளபெரிய நீச்சல் குளத்தில் நீராடுதல் என்ற வழக்கம் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

- இங்கு வாயில் சிறுமீன்களை வைத்துள்ள முதலைகள், ஆமை போன்ற உருவங்கள்ஆறுகளுடன் சேர்த்துப் பொறிக்கப்

பட்டுள்ளதை முத்திரைகள் மூலம் காணமுடிகிறது.

- சிந்துவெளி மக்கள் ஆற்று வணக்கம் (அ) ஆற்று வழிபாடு செய்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் வழிபடுவதற்கு முன் நீராடும் வழக்கம் இருப்பதை இன்றும் காணலாம். மேலும், நீர் நிலைகளைத் தெய்வமாக வணங்குவதும் தமிழர்களிடையேஉள்ள பண்பாடாகும்.

## சூரியன் மற்றும் நெருப்பு வழிபாடு

- சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் சூரியன், பாம்பு உருவங்கள் காணப்படுகின்றன.

- இவர்கள் சூரியனையும் நெருப்பையும் கடவுளாகக் கருதி வழிபட்டனர் எனலாம்.

- இன்றும், தமிழகத்தில் பஞ்ச பூதத் தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலை அக்னித் தலமாகவும் (நெருப்பு), சிவனின் வடிவமாகவும் வணங்கப்படுகிறது.

- சிந்துவெளி மக்களிடையே காணப்படும் பாம்பு வழிபாடு, லிங்கவழிபாடு போன்றவை தமிழகப் பண்பாட்டோடு பொருந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கலைகள்

- எழுத்துகள் சிந்துவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள'சித்திர எழுத்துகள்' சிந்துவெளி மக்களின் மொழிக்குரிய எழுத்துகளாகும்.

- இந்த எழுத்துகள் இடமிருந்து வலமாக ஒரு வரியும், வலமிருந்து இடமாக மற்றொரு வரியாகவும் எழுதப்பட்டுள்ளன.

- தமிழகத்தின் கீழ்வாலை, குளிர்சுனை, புறக்கல், ஆலம்பாடி, செத்தவாரை, நேகனூர்பட்டி ஆகிய இடங்களில் காணப்படும் எழுத்துகள், சிந்துவெளியிலுள்ள எழுத்துகளோடு தொடர்புடைய தொல் தமிழ் எழுத்துகளாகும்.

- வடபிராமி எழுத்துகளும், தென் பிராமி எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து வளர்ச்சி பெற்றவையாகும்.

- சிந்துவெளி எழுத்துக்கள் சிந்துவெளி நாகரிக மக்களின் பேச்சு மொழி, எழுத்துக்கள் தொடர்பாக இன்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிந்துவெளி எழுத்துக்களுக்கும் திராவிட எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ஹிராசு பாதிரியார், ஐராவதம் மகாதேவன், பாலகிருஷ்ணன் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் நிரூபித்து உள்ளனர்

- திருநெல்வேலியில் கிடைத்த மட்பாண்டங்கள் மீதுள்ள எழுத்துக் குறிகளையும், நீலகிரியில் உள்ள கல்வெட்டுகளையும் கொண்டு அறியலாம்.

- சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி, திராவிடமொழி என்பதும், தமிழ்ஒரு தென்

திராவிடமொழி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உலக மொழிகள் எவற்றிலும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. எழுத்துக்களின் ஒலிப்பு முறையான ழ,ன, ள, ற, ண ஆகிய எழுத்துக்கள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்றன

### சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு

- சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு குறித்தும், அதற்கான சான்றுகள் குறித்தும் வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே ஒரு மித்த கருத்து இல்லை.
- அங்குக் கண்டெடுக்கப்பட்டமனித எலும்புக்கூடுகளின் அடிப்படையில் பார்த்தால் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு அழிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.
- வரலாற்று ஆசிரியர் கிருஷ்ணாரெட்டி என்பாரின் கூற்றுப்படி ஹரப்பா, மொகஞ்சதாரோஆகிய இரு நகரங்கள்மிகப்பெரிய வணிகத்தலங்களாக இருந்துள்ளன.
- இங்குப் பொருளாதார தேக்க நிலைஏற்பட்டு, நகரங்களைவிட்டு மக்கள்வெளியேறி இருக்கலாம்.
- சிந்துநதி தன் போக்கை மாற்றிக்கொண்டதால், கடுமையான வறட்சி ஏற்பட்டு மக்கள்அந்நகரங்களிலிருந்து வெளியேறி இருக்கலாம்.

### இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை

- பழைமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம், இந்திய பண்பாட்டிற்குப் பின்வரும் கொடைகளை வழங்கியுள்ளது
- சிந்துவெளி காலத்தில் தோன்றிய நகரங்களின் வடிவமைப்பு மேம்பட்டதாகவும் மற்ற நகர வடிவமைப்பிற்கு முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளது.
- கட்டடக் கலையில் சுட்டசெங்கற்கள், சுண்ணாம்பைப் பயன்படுத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர்.
- நகரம் மாசடைவதைக் தடுக்க சுண்ணாம்புக் கால்வாய்கள், நகரின் ஒதுக்குப் புறமாக அமைக்கப்பட்டிருந்தன.
- தூய்மை மற்றும் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட்டது.
- கவின்கலைகள் நன்கு ஊக்குவிக்கப்பட்டன.
- சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மொழியே தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது

லோக்கல் குஜராத்தில் உள்ள அகமதாபாத் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின் போது எஸ். ஆர். ராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடம் லோத்தல் ஆகும் இவ்விடம் ஆனது சிந்துவெளி நாகரிக காலத்தில் இருந்த துறைமுகமாகும் இந்த உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கை துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலமாக எதிர்த்து உள்ளிட்ட நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்தன

tnpscbooks

6 ஆம் வகுப்பு- பருவம் 2

அலகு 2 - இந்திய அரசமைப்புச் சட்டம்

- நமது அரசமைப்புச் சட்டம் 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.
- அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்என்றார் வரலாற்று ஆசிரியை மலர்மதி.
- ஆனால் அந்த நாளில் நம்முடைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள் உண்டு.
- முக்கியமாக 1929-ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (PURNA SWARAJ) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது.
- அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக்(Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது.
- பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது.
- அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உரிமைகள், உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது.
- பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்.
- 'இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது.
- அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது,
- அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.
- அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா ஆஸாத், எஸ். ராதாகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி பண்டிட், சரோஜினி நாயுடு உட்படப்பலர் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்.
- 15 பெண் உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்.
- ஏழு பேர் கொண்ட அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராகஅம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- மேலும் இதற்கான ஆலோசகராகபி.என்.ராவ் நியமிக்கப்பட்டார்.

- இக்குழுவின் முதல் கூட்டம் 1946-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி நடைபெற்றது.
- அன்றே அரசமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கிவிட்டன.
- அண்ணல் அம்பேத்கர் 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.
- இக்குழுவினர் இங்கிலாந்து, அமெரிக்கா, அன்றைய சோவியத் ரஷ்யா, ஃப்ரான்ஸ், சுவிட்சர்லாந்து உட்பட 60 நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை வாசித்து, அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன்மாதிரியாகக் கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்.
- அரசமைப்புச் சட்டம் இறுதி முன்னர் செய்யப்படுவதற்கு சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள் (amendments) அதில் மேற்கொள்ளப்பட்டன.
- 2 ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாட்கள் கடந்த நிலையில், 1949-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது .
- 64 லட்சம் ரூபாய் இதற்கென செலவிடப்பட்டது.
- நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.
- அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரை தான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது.
- அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச் சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது.
- அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது.
- நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது.
- இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.
- மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும் சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது.
- அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது.
- இந்திய அரசு சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) வழியேதான் ஆளப்படுகிறது.
- இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது.
- இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின்(நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும்.

- அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்.
- ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன.
- சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
- 

- அரசுகள் சட்டமியற்றும் போதும், ஆட்சி செய்யும் போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது.
- இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.
- பதினெட்டு வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள்.
- இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது.'
- உரிமைகளைப் போலவே ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகளும் இருக்கும்
- தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது,
- எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது,
- சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும் போது சேவை செய்ய தயாராக இருப்பது,
- சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது,
- நமது பழம் பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது,
- காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது,
- அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது,
- வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது,
- குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6-14 வயதுக்குள் தருவது

ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது.' என்று முடித்தார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

தகவல் பேழை

- •அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் பி. ஆர். அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம். முன்ஷி, சையது முகம்மது சாதுல்லா, என். மாதவ ராவ், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி ஆகிய சட்ட வல்லுனர்கள் இடம்பெற்றிருந்தனர்.
- அக்குழுவின் தலைவரான பி. ஆர். அம்பேத்கர் நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார்.
- நமது அரசியல் சட்டம் உருவானபோது, 395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம்பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள், பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம்பெற்றுள்ளன.
- அரசமைப்புச் சட்டம் 16.9.2016-வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## பத்தாம் வகுப்பு

## அலகு – 1 இந்திய அரசியலமைப்பு

- ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.
- அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும்.
- அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கியநாடுகளில் (U.S.A.) தோன்றியது.

### இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

- 1946ஆம் ஆண்டு, அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.
- இச்சபையில் 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் (1) மற்றும் மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் (3) என மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர்.
- அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம், 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது.
- இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் டாக்டர். சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் போதே

அவர் இறந்ததைத் தொடர்ந்து, டாக்டர். இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- இக்கூட்டத் தொடர் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது.
- இக்கூட்டத்தின் போது 2473 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன.
- அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது.
- இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுத் தலைவர் டாக்டர். B.R. அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.
- எனவே அவர் "இந்திய அரசியலமைப்பின் தந்தை" என அறியப்படுகிறார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட பின்னர், பொதுமக்கள், பத்திரிக்கைகள், மாகாண சட்டமன்றங்கள் மற்றும் பலரால் விவாதிக்கப்பட்டது.
- இறுதியாக முகவுரை, 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

- பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- இந்தியாவைச் சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

## முகவுரை

- 'முகவுரை' (Preamble) என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது.
- இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது.
- இது பெரும் மதிப்புடன் "அரசியலமைப்பின் திறவுகோல்" என குறிப்பிடப்படுகிறது.
- 1947ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜவகர்லால் நேருவின் 'குறிக்கோள் தீர்மானத்தின்' அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது.
- முகவுரையானது 1976ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி திருத்தப்பட்டது.
- அதன்படி, சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு போன்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன.
- 'இந்திய மக்களாகிய நாம்' என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது.
- இதிலிருந்து, இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் என நாம் அறியலாம்.
- இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.
- இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி என அனைத்திலும் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- 1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன முக்கிய முழக்கங்களாயின. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

குடியுரிமை

- 'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.
- இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும்.
- இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- இந்திய அரசியலமைப்பின் பகுதி II சட்டப்பிரிவுகள் 5 லிருந்து 11 வரை குடியுரிமையைப் பற்றி விளக்குகின்றன.
- குடியுரிமைச் சட்டம் (1955)
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு, 1955ல் இயற்றப்பட்ட குடியுரிமைச்சட்டம், குடியுரிமை பெறுதல் மற்றும் குடியுரிமை இழத்தல் ஆகியன பற்றி விளக்குகிறது.
- இச்சட்டம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது.
- குடியுரிமை பெறுதல்

- குடியுரிமைச் சட்டம் 1955ன் படி ஒருவர் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையில் குடியுரிமை பெறமுடியும்.
- பிறப்பின் மூலம்: 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.
- வம்சாவளி மூலம்: 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை (அவர் பிறந்த போது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்.
- பதிவின் மூலம்: ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.
- இயல்புரிமை மூலம்: ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.
- பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்: பிற நாடுகள் / பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களைத் தமது குடிமக்களாகக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம்.

### குடியுரிமையை இழத்தல்

- குடியுரிமைச் சட்டம் 1955ன் படி, ஒருவர் தன் குடியுரிமையை, சட்டத்தின் மூலமாக பெறப்பட்டதாகவோ (அ) அரசியலமைப்பின் கீழ் முன்னுரிமையால் பெறப்பட்டதாகவோ இருக்கும்பட்சத்தில் பெற்ற குடியுரிமையைத் துறத்தல், முடிவுறச் செய்தல், இழத்தல் என்ற பின்வரும் மூன்று வழிகளில் இழப்பார்.
- ஒரு குடிமகன் தாமாக முன்வந்து தனது குடியுரிமையை துறத்தல்.
- வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும்போது தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்துவிடுதல்.
- இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமை பெற்றவர், தவறான பிரதிநிதித்துவம் தந்தவர் (அ) உண்மைகளை மறைத்தவர் (அ) எதிரி நாட்டுடன் வாணிகம் செய்தவர் அல்லது இரண்டாண்டு காலத்திற்கு சிறை தண்டனை பெற்றவர் என்பதை மத்திய அரசு கண்டறிந்து அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திப்படும் பட்சத்தில் மத்திய அரசு, அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

### அடிப்படை உரிமை

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12ல் இருந்து 35 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன.
- அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த அடிப்படை உரிமைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினார்கள்.
- முதலில் இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது.
- ஆனால், தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன.

- இந்திய அரசியலமைப்பின் பகுதி (III) 'இந்தியாவின் மகாசாசனம்' என அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது.
- ஆனால் இந்திய குடிமக்களுக்கு மட்டுமேயான சில அடிப்படை உரிமைகளும் உள்ளன.
- அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு - 32)
- நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.
- இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது.
- டாக்டர். B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.

**அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas corpus)**

- சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

**ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)**

- மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்

**இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)**

- ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

**ஈ) ஆவணக் கேட்பு பேராணை (Certiorari)**

- உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

**உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo-Warranto)**

- இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

**அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல்**

- இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் குடியரசுத்தலைவரால் அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது.
- மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத்தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதின் மூலம் தடை செய்யலாம்.

- குடியரசுத்தலைவரின் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை . | இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை . |
| அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது |
| இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன . | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |

- சமத்துவ உரிமை
- பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- பிரிவு 15- மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்தல்.
- பிரிவு 16 - பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல். பிரிவு 17 - தீண்டாமையை ஒழித்தல்.
- பிரிவு 18 - இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் - தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.
- சுதந்திர உரிமை
- பிரிவு 19 - பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- பிரிவு 20 - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21 - வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21 A - தொடக்கக்கல்வி பெறும் உரிமை.
- பிரிவு 22 - சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை
- சுரண்டலுக்கெதிரான உரிமை
- பிரிவு 23 - கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.
- பிரிவு 24 - தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.
- சமயச்சார்பு உரிமை
- பிரிவு 25 - எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
- பிரிவு 26 - சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.
- பிரிவு 27 - எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.

- பிரிவு 28 - மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை
- கல்வி, கலாச்சார உரிமை
- பிரிவு 29 - சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.
- பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.
- 1978ஆம் ஆண்டு, 44ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தப்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கப்பட்டது.
- இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII, பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.
- அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
- பிரிவு 32 - தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

## அடிப்படைக் கடமைகள்

- இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும்.
- 1976ஆம் ஆண்டு, அமைக்கப்பட்ட சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டி அரசியலமைப்புச் சட்ட திருத்தம் செய்ய பரிந்துரைத்தது.
- அதன்படி 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியல் அமைப்புச் சட்டதிருத்தம் நமது அரசியலமைப்பில் குடிமக்களின் பொறுப்புகள் சிலவற்றைச் சேர்த்தது.
- இவ்வாறு சேர்க்கப்பட்ட பொறுப்புகளே குடிமக்களின் கடமைகள் என்றழைக்கப்பட்டன.
- மேலும் இந்தச் சட்டத்திருத்தம், அரசியலமைப்பின் பகுதி IV A என்ற ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது.
- இந்தப் புதிய பகுதி 51A என்ற ஒரேயொரு பிரிவை மட்டும் கொண்டது.
- இது குடிமக்களின் பத்து அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பாக உள்ளது.

### அடிப்படைக் கடமைகளின் பட்டியல்

- ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியகீதம், தேசியக்கொடி, தேசியசின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.
- சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.
- இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.
- தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.
- சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை

மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.

- நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.
- காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.
- அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்.
- வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- தனிப்பட்ட மற்றும் கூட்டு செயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான, உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்.
- 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல். (86வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2002இன் படி 51A (k) கீழ் 11வது அடிப்படை கடமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பிரிவின் கீழ் அனைத்து இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர்கள் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி தர வேண்டும்).

## மத்திய-மாநில உறவுகள்

### சட்டமன்ற உறவுகள்

- மத்திய நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.
- இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும்.
- இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது.
- அவை மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97, 66, 47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது.
- மத்திய அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது.
- மாநில அரசுக்குச் சொந்தமான பட்டியலில் சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை மாநில சட்டமன்றம் பெற்றுள்ளது.
- நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்ற அதிகாரம் கொண்டுள்ளன.
- ஆனால், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே பொதுப்பட்டியலில் உள்ள துறைகள் குறித்து சட்டமியற்றும் பொழுது

முரண்பாடு ஏற்பட்டால், மத்திய அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.

- தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. அவை, கல்வி, காடுகள், எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

### நிர்வாக உறவுகள்

- ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது.
- அதே வேளையில், மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது.
- அவை, அ) நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம், ஆ) மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை (அ) ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

### நிதி உறவுகள்

- இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி XII சட்டப்பிரிவு 268ல்இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் மத்திய - மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது.
- மத்திய - மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.
- இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280ன் கீழ் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.
- 1969இல் மத்திய-மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு டாக்டர்.P.V.இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது.

### அலுவலக மொழிகள்

- அரசியலமைப்பு சட்டப் பகுதி XVIIஇல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன.
- தொடக்கத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.
- தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- 2004ஆம் ஆண்டு இந்திய அரசு செம்மொழிகள் எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை, தமிழ் (2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008), கன்னடம்(2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா(2014).

## அவசரகால ஏற்பாடுகள்

### தேசிய அவசரநிலை (சட்டப்பிரிவு 352)

- போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத்தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் அவசர நிலையை அறிவிக்கலாம்.
- போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புற அவசரநிலை' எனப்படுகிறது.
- ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'உள்நாட்டு அவசர நிலை' எனப்படுகிறது.
- இந்த வகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

### மாநில அவசரநிலை (சட்டப்பிரிவு 356)

- ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும் பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத்தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.
- இந்த அவசரநிலை, சட்டப்பிரிவு352ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடரமுடியும்.
- அதிகபட்சம் அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்கமுடியும்.
- மாநிலமானது, குடியரசுத்தலைவர் சார்பாக ஆளுநரால் ஆளப்படுகிறது.
- இந்தியாவில் முதன்முறையாக 1951இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது.

### நிதி சார்ந்த அவசரநிலை (சட்டப்பிரிவு 360)

- நிதிநிலைத் தன்மை, இந்தியாவின் கடன் தன்மை மற்றும் இந்தியாவின் பகுதிகள் ஆபத்தில் இருந்தால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ் குடியரசுத்தலைவர் நிதி சார்ந்த அவசரநிலையைப் பிறப்பிக்கலாம்.
- இந்த வகையான அவசர நிலையில் மத்திய - மாநில அரசு ஊழியர் எந்த வகுப்பினராயினும் அவர்களது ஊதியம், படிகள் மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட அனைவரது ஊதியமும் குடியரசுத்தலைவரின் ஓர் ஆணையின் மூலம் குறைக்கப்படும்.
- இந்த வகையான அவசரநிலை இந்தியாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

- 'அமெண்ட்மெண்ட்' (Amendment) எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது.
- அரசியலமைப்பின் சட்டம் பகுதி XXல் 368வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது.

## அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் வழிமுறைகள்

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து, வாக்களித்தவர்களில் 3ல் 2 பங்குக்கு குறையாமல் மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே, குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.
- குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்த பின் மசோதா திருத்தப்பட்டச் சொற்களுடன் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தால் மட்டுமே அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரமுடியும்.
- மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது.

## அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள்

- அரசியலமைப்பின் 368வது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது.
- நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
- நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
- நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தப்படுதல்.
- அரசியலமைப்பின் - 42வது சட்டத்திருத்தம் 'குறு அரசியலமைப்பு' என அறியப்படுகிறது.

## அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுக்கள்

- அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய 2000ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மானத்தின் படி திரு M.N. வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது.
- அரசின் பல்வேறு நிலைகள், அவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் பங்களிப்புகள் குறித்துப் புதிய நோக்கத்தோடு ஆராய ஏப்ரல் 2007ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட M.M. பூஞ்சி தலைமையில் அப்போதைய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது.

## 12 ஆம் வகுப்பு அரசியல் அறிவியல்

### அத்தியாயம் 1: இந்திய அரசமைப்பு

**அரசமைப்பின் பொருள், பணிகள் மற்றும் முக்கியத்துவம்**

- இந்தியா ஒரு பண்பாட்டு வேற்றுமை கொண்ட நாடு என்ற போதிலும் இந்தியர்கள் அனைவரும் பல வகைகளில் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் சார்ந்தும் ஒத்துழைப்புடனும் உள்ளனர்.
- இந்த நாட்டின் மக்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் வாழ சில குறிப்பிட்ட அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் கொண்டிருப்பது அவசியமாகிறது.
- இத்தகைய விதிகள், ஒழுங்குமுறைகள் இல்லையென்றால் மக்களாட்சி நிலைத்திருக்காது. அந்நிலையில் மக்களின் நிலை பாதுகாப்பற்றதாக இருக்கும்.
- காலனிய ஆட்சிக்காலத்தில் இந்தியா ஆங்கிலேய அரசால் பிறப்பிக்கப்பட்ட சாசனங்கள் (Charters), ஆட்சிக்குழு சட்டங்கள் (council Acts), காலனியாட்சிக்கால இந்திய அரசாங்கச் சட்டம் (Government of India act) ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டே ஆளப்பட்டது. புதிதாக எழுச்சிபெற்ற இந்தியாவின் இயக்கங்களும் அதன் தலைவர்களும் ஒரு வரையறுக்கப்பட்ட எழுதப்பட்ட புதிய அரசமைப்பின் அடிப்படையில் புதிய இந்தியா உருவாக்கப்பட வேண்டும் என்பதை விரும்பினர்.
- மைய (மத்திய) சட்டமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. மாநிலங்களின் (அரசுகளின்) ஒன்றியமாக, பல பிரிவுகளுக்கும் ஒருமைப்பாட்டினையும் ஒருங்கிணைப்பையும் வழங்கும் கூட்டாட்சியை உருவாக்கும் வகையில் புதிய அரசமைப்பை முன்மொழிய வேண்டியிருந்தது.
- ஒரு அரசமைப்பின் மிக முக்கியச் செயல்பாடு என்பது அந்த அரசின் குடிமக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கக்கூடிய அடிப்படை விதிகளை வழங்குவது தான்.
- ஒரு அரசு அமைக்கப்பட்டு, அது ஆட்சி செய்வதற்குத் தேவையான விதிகளைக் கொண்டதே அரசமைப்பு ஆகும். ஒரு அரசின் பல பாகங்களுக்குத் தேவையான ஒதுக்கீடுகளை அரசமைப்பு வரையறுக்கிறது.
- இந்திய பன்மைத்துவத்துக்கு மாநிலங்களின் ஒன்றியமே தேவையானதாகும். இந்திய விடுதலைப் போராட்ட இயக்கங்களும் ஒரு மக்களாட்சி வடிவிலான அரசினையே விரும்பின. இதன்படி நாடாளுமன்றமே நமது அரசின் கொள்கைகளையும் சட்டங்களையும் முடிவு செய்கிறது.
- ஒரு சமூகத்தின் விருப்பங்களை நிறைவேற்றவும் ஒரு சமுதாயத்துக்கான வரையறைகளை உருவாக்கவும்

அரசாங்கத்திற்கு அரசமைப்பு அதிகாரம் வழங்குகிறது.

- இந்திய அரசமைப்பின் நான்காவது பாகம் இந்திய சமூகத்தில் பரவலாக நிலவும் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் சட்டங்களை அரசு உருவாக்கும் வகையில் விதிகளைக் கொண்டுள்ளது.
- ஒரு நாட்டின் மக்களின் அடிப்படை அடையாளங்களை அரசமைப்பு வெளிப்படுத்துகிறது.
- தனது குடிமக்களால் ஒருபோதும் மீறப்படாத சில குறிப்பிட்ட அடிப்படைச் சட்டங்களை ஒரு அரசமைப்பு முன்மொழிகிறது. ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களையும் ஒரு அரசமைப்பு பாதுகாக்கிறது. ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அந்நாட்டின் மாநில அரசுகளுக்கும் இடையேயான உறவினையும், பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான உறவினையும் கொண்ட ஒரு சட்டகத்தினையும் அது உருவாக்குகிறது.
- உலகின் அரசமைப்புகளில் பெரும்பான்மையானவை எழுதப்பட்ட ஆவணங்களாகக் காணப்படுகின்றன; அவை பல பிரிவுகள், பட்டியல்களைக் கொண்டுள்ளன.
- இங்கிலாந்து அரசில் காணப்படுவது போன்று அரசமைப்பை ஒரே ஆவணமாகக் கொண்டிராத சில அரசுகளும் உள்ளன. இங்கிலாந்து அரசானது ஏராளமான வழக்கங்கள், உடன்பாடுகள் மற்றும் வரலாற்று முன்னுதாரணங்கள் ஆகியனவற்றின் தொகுப்பாக பல அங்கங்களைக் கொண்ட அரசமைப்பினைக் கொண்டுள்ளது.

### மதச்சார்பு அரசு

- மதச்சார்பின்மை கோட்பாட்டினை பின்பற்றாத அரசு மதச்சார்பு அரசு எனப்படும். மத சார்பு அரசு என்பது ஒரு மதத்தினை அரசு மதமாகக் கொண்டிருக்கும். அந்த அரசின் உயர் பதவிகள் அனைத்தும் அரசு மதத்தை பின்பற்றுவோருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கும். மதச்சார்பு அரசு உதாரணங்கள் - பாகிஸ்தான், வாடிகன் நகரம் போன்றவை ஆகும்.

### உருவாக்கம்

- ஓர் அரசமைப்பு எவ்வாறு நடைமுறைக்கு வந்தது, அதை யார் உருவாக்கியது, அதன் அதிகார அமைப்புகள் என்ன என்பன போன்ற தகவல்கள் அரசமைப்பு உருவாக்கம்' என்ற பெயரால் குறிக்கப்படுகிறது.
- உதாரணமாக, அமெரிக்க அரசமைப்பானது அங்கு தேசிய இயக்கம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது. இந்திய அரசமைப்பானது மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்பட்ட சட்டப்பூர்வமான அரசமைப்பாகும் விடுதலையின் போது நாட்டில் இருந்த மக்கள் பிரிவுகளில்

பெரும்பான்மையோரின் ஒருமித்த கருத்தை இந்திய அரசமைப்பு பிரதிபலிக்கிறது.

- அரசமைப்பை பொது வாக்கெடுப்புக்கு விட்டு அங்கீகாரம் பெறும் நிகழ்வுகள் சில நாடுகளில் உள்ளது.

## பொதுவாக்கெடுப்பு

- சட்டமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளால் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு மாறாக ஒன்று அல்லது பல கேள்விகளின் தொகுப்பின் மீது வாக்காளர்களின் ஒப்புதல்பெற நேரடி வாக்கெடுப்பு நடத்துவது பொதுவாக்கெடுப்பு ஆகும்.
- பொதுவாக்கெடுப்பு முறை ஒரு சட்டப்பூர்வ ஏற்பாடகவும், தனிநபருக்கும், பொதுமக்களுக்கும் அளிக்கும் அங்கீகாரமாகவும், ஒப்புதலாகவும் பார்க்கப்படுகிறது.
- இந்திய அரசமைப்பு திருத்தங்களில் ஒன்றிற்குக்கூட இதுவரை பொதுவாக்கெடுப்பு விடப்பட்டதில்லை.
- இந்திய மக்களாட்சி முறையில் இது ஒரு பின்னடைவாகும் இதன் பொருத்தப்பாட்டினை அறிய சுவிட்சர்லாந்து நாட்டின் பொது வாக்கெடுப்புமுறையை அறிந்துகொள்வது பயனுள்ளதாக அமையும்.

## ஓர் அரசமைப்பின் அம்சங்கள்

- ஒரு சிறந்த அரசமைப்பு என்பது சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் எதிர்பார்ப்புகளுக்கும் இடமளிப்பதாக இருக்க வேண்டும்.
- மதம், சாதி, மொழி அடிப்படையில் பாகுபாடு கொண்ட அரசமைப்புகள் நாட்டின் அனைவராலும் ஏற்கப்படாமல் போகலாம்.
- அரசமைப்பின் அடிப்படைச் சட்டவிதிகளே அதன் தன்மையை வெளிப்படுத்துகின்றன. தன் குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரத்தினையும், சமத்துவத்தினையும் பாதுகாக்கும் எந்த அரசமைப்பும் வெற்றிகரமானதாகும்.

## இந்தியாவில் மதச்சார்பின்மை


- இந்திய அரசமைப்பின் 42வது திருத்தச்சட்டம், அரசமைப்பின் முகப்புரையில் கூறப்பட்டுள்ள 'இறையாண்மை கொண்ட குடியரசு' என்பதை 'இறையாண்மை , சமதர்மம், மதச்சார்பற்ற மக்களாட்சி குடியரசு' என்றும் 'நாட்டின் ஒற்றுமை' என்ற சொற்றொடரை 'நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு' என்றும் முந்நாள் பிரதமர் இந்திராகாந்தி 1976இல் தேசிய அவசரநிலைக் காலத்தில் இந்த 42-வது திருத்தத்தைக் கொண்டு வந்தார்.
- ஒரு தனிநபர் அல்லது ஒற்றை நிறுவனத்திடம் அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்டால் தவறாகப் பயன்படுத்தப்பட வழியேற்படும் என்பதால் ஒரு சிறந்த அரசமைப்பில்

அதிகாரங்கள் தனி நபரிடமோ ஒற்றை நிறுவனத்திடமோ குவிக்கப்படுவதில்லை.

- இதனையொட்டி பல அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் பிரித்து வழங்கப்பட்டு சமநிலைப்படுத்தும் முறை பின்பற்றப்படுகிறது.
- இந்திய அரசமைப்பு அதிகாரங்களை சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை போன்ற நிறுவனங்கள் இடையே கிடைமட்டமாக பகிர்ந்து வழங்குகிறது.
- இந்திய அரசமைப்பு அதிக இறுக்கமான தன்மையைக் கொண்டதில்லை; அதிக நெகிழ்வுத் தன்மையும் கொண்டதில்லை; அதன் மாறாத அடிப்படை அமைப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் இது வெளிப்படுகிறது.
- சிறப்பாக எழுதி வடிவமைக்கப்பட்ட ஒரு அரசமைப்பு என்பது அதன் உட்கருவைத் தக்க வைத்துக் கொண்டு மாறும் சூழல்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளத் தக்கதாகும்.
- நமது அரசமைப்பு நெருக்கடிமிக்க தருணங்களிலும் செயல்படுவதை அரசமைப்பை உருவாக்கிய மேதைகள் உறுதிசெய்துள்ளனர்.

## அரசமைப்பின் தயாரிப்புப் பணிகள்

- அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்கள் அரசமைப்பினை எழுதினர். அரசமைப்பு நிர்ணயச் சபையின் முதல் கூட்டம் 9 டிசம்பர் 1946 அன்று கூடியது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் மீதமுள்ள இந்தியாவுக்கான அரசமைப்பு நிர்ணயச் சபை 14 ஆகஸ்ட் 1947 அன்று மீண்டும் கூடியது. அன்றைய மாகாணச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களே அரசமைப்பு நிர்ணயச் சபை உறுப்பினர்களை மறைமுக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுத்தனர்.
- கேபினட் மிஷன் என அழைக்கப்பட்ட பிரிட்டானிய அமைச்சரவைக் குழு முன்மொழிந்த அடிப்படையில் அரசமைப்பு நிர்ணயசபை உறுப்பினர்கள் வரிசை அமைந்தது.



- (புகைப்பட விளக்கம்: இந்திய அரசமைப்பு நிர்ணயசபையின் வரைவு குழு உறுப்பினர்கள், பிப்ரவரி, 1948: அமர்ந்திருப்போர் - இடமிருந்து: என். மாதவ ராவ், சையத் முஹமது சாதுல்லா , டாக்டர். பி. ஆர். அம்பேத்கர், சர் அல்லாடி கிருஷ்ணசாமி, சர் பி. என். ராவ், நிற்போர், இடமிருந்து: எஸ். என். முகர்ஜி, ஜுகல் கிஷோர் கண்ணா , கேவல் கிருஷ்ணா .)
- அன்றைய மாகாணங்கள், சுதேச அரசுகள், அல்லது அரசுகளின் குழுக்களில் இருந்து அதன் மக்கள்தொகைக்கு ஏற்றபடி பத்து லட்சத்துக்கு

ஒருவர் எனும் விகிதத்தில் உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டனர்.

- இதன்படி, மாகாணங்களில் இருந்து 292 உறுப்பினர்களும் சுதேச அரசுகளிடம் இருந்து 93 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ஒவ்வொரு மாகாணத்திற்கும் இந்து, முஸ்லிம், சீக்கியர் ஆகிய சமுதாயங்களின் மக்கள்தொகை விகுதத்திற்கேற்ப இடம் ஒதுக்கப்பட்டது.
- இந்த உறுப்பினர்கள் அந்தந்த மாகாணத்துக்கு மாற்றத்தக்க வாக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையின்படி ஒற்றை மாற்று வாக்கு அடிப்படையிலான விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- சுதேச அரசுகள் தங்கள் பகுதியிலிருந்து உறுப்பினர்களை மக்கள் தொகை விகிதத்துக்கேற்ப தாங்களே தேர்வுசெய்துகொள்ளும் முறையை உருவாக்க அனுமதிக்கப்பட்டது.

### அரசமைப்பு நிர்ணயசபை உருவாக்கம்

- 284 உறுப்பினர்கள் 26.11.1949 அன்று அரசமைப்பினை ஏற்று கையொப்பமிட்டு அரசமைப்பை நிறைவேற்றினர்.
- ❖ அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9 அன்று 11 மணி அளவில் புதுதில்லி, அரசமைப்பு அரங்கில் கூடியது. அன்றைய கூட்டத்தின் முதல் கூட்டப்பொருள்: "தற்காலிகத் தலைவர் தேர்வு ஆகும். ஆச்சார்ய ஜே. பி. கிருபாளினி (ஐக்கிய மாகாணம் : பொது) அவர்கள் டாக்டர் சச்சிதானந்த சின்ஹாவை தற்காலிகத் தலைவராகத் தலைமையேற்று நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.
- ❖ அரசமைப்புற்கு ஒப்புதல் தருவதற்காக சபை 24.01.1950 அன்று கூடிய கூட்டத்திற்கு டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையேற்றார்.
- ❖ 9 டிசம்பர் 1946 முதல் 24 ஜனவரி, 1950 வரை அரசமைப்பு நிர்ணயச்சபையின் விவாதங்களின் தொகுப்பு 12 தொகுதிகளைக் கொண்டதாகும்.

### இந்திய அரசமைப்பின் மூல ஆதாரங்கள்

❖ தொகுதி 1 - 9 டிசம்பர் முதல் 23 டிசம்பர் 1946 வரை

❖ தொகுதி 2 - 20 ஜனவரி முதல் 25 ஜனவரி 1947 வரை

❖ தொகுதி 3 - 28 ஏப்ரல் முதல் 2 மே 1947 வரை

❖ தொகுதி 4 - 14 ஜூலை முதல் 31 ஜூலை 1947 வரை

❖ தொகுதி 5 - 14 ஆகஸ்ட் முதல் 30 ஆகஸ்ட் 1947 வரை

❖ தொகுதி 6 - 27 ஜனவரி 1948

❖ தொகுதி 7 - 4 நவம்பர் 1948 முதல் 8 ஜனவரி 1949 வரை

❖ தொகுதி 8 - 16 மே முதல் 16 ஜூன் 1949 வரை

❖ தொகுதி 9 - 30 ஜூலை முதல் 18 செப்டம்பர் 1949 வரை

❖ தொகுதி 10 - 6 அக்டோபர் முதல் 17 அக்டோபர் 1949 வரை

❖ தொகுதி 11 - 14 நவம்பர் முதல் 26 நவம்பர் 1949 வரை

❖ தொகுதி 12 - 24 ஜனவரி 1950

## இந்திய அரசமைப்பின் மூல ஆதாரங்கள்

### இந்திய அரசாங்கச் சட்டம், 1935

- கூட்டாட்சி விதிகள், ஆளுநர் பதவி, நீதித்துறை, பொதுத் தேர்வாணையங்கள், நெருக்கடிகால விதிகள், நிர்வாக விவரங்கள் ஆகியன இந்திய அரசாங்கச் சட்டம், 1935-லிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. அவை பின்வருமாறு:
- பிரிட்டன்
- நாடாளுமன்ற அரசு, ஒற்றைக் குடியுரிமை, சட்டத்தின் ஆட்சி ,நாடாளுமன்ற செயல்முறைகள். இடைக்கால தடையாணைகள்
- அமெரிக்க அரசமைப்பு
- அடிப்படை உரிமைகள், நீதி சீராய்வு, குடியரசுத்தலைவர் மீதான பதவிநீக்க தீர்மானம், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், குடியரசுத் துணைத்தலைவர் போன்றோரை பதவி நீக்கம் செய்யும் முறை
- அயர்லாந்து
- அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்
- கனடா
- ஒரு வலுவான மத்திய அரசுடன் கூடிய கூட்டாட்சி, மத்திய அரசிடம் பொதுப் பட்டியல், மத்திய அரசால் மாநில ஆளுநர் நியமனம், உச்சநீதிமன்றத்தின் அறிவுரை அதிகார வரம்பு
- ஆஸ்திரேலியா
- வணிகம், வர்த்தக சுதந்திரம், நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் |கூட்டுக்கூட்டம்
- ஜெர்மனி வெய்மர் அரசமைப்பு
- நெருக்கடிநிலை காலத்தில் அடிப்படை உரிமைகள் பறிப்பு
- சோவியத் யூனியன்
- அடிப்படைக் கடமைகள், முகப்புரையில் (சமூக, பொருளாதார, அரசியல்) நீதியின் மாண்புகள், அடிப்படைக் கடமைகள். (42வது திருத்தத்தில் உறுதிபடுத்தப்பட்டது.)
- பிரான்சு
- குடியரசு, முகப்புரையில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
- தென் ஆப்பிரிக்கா
- அரசமைப்புத் திருத்தமுறை, மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்வு

- (இறுதிபடுத்தப்பட்ட, திருத்தப்பட்ட வரைவு 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது).

## இந்திய அரசமைப்பின் சிறப்பியல்புகள்

### நீளமான எழுதப்பட்ட அரசமைப்பு:

- இந்திய அரசமைப்புதான் உலகிலேயே நீளமான எழுதப்பட்ட அரசமைப்பாகக் கருதப்படுகிறது. மாநிலங்கள், மத்திய அரசு மற்றும் அவற்றுக்கு இடையிலான உறவுகள் குறித்த பல்வேறு விதிகளை கொண்டுள்ளது. நமது அரசமைப்பை உருவாக்கிய மேதைகள் உலகின் பல அரசமைப்பு மற்றும் பல்வேறு அரசமைப்பின் மூலங்களிலிருந்து நம் அரசமைப்பை உருவாக்கியுள்ளனர். தனிநபர் உரிமைகளை அடிப்படை உரிமைகளாகவும், அரசுக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகளாகவும், நிர்வாகச் செயல்முறை விவரங்கள் என விரிவாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன.

### இறுக்கம், நெகிழ்வுத் தன்மை இரண்டும் கொண்ட தனித்துவம்:

- அதன் அமலாக்கச் செயல்முறைகளின் அடிப்படையில் இறுக்கமும் நெகிழ்வும் கொண்டதாக இந்திய அரசமைப்பு அழைக்கப்படலாம்.

### இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சி, குடியரசு

- வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களே இந்தியாவை ஆள்கிறார்கள்.
- இந்தியா ஒரு இறையாண்மை கொண்ட அரசு என்றால் தனது உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களை எந்தவிதமான வெளி நாட்டின் தலையீடு இன்றி நிர்வகிப்பதாகும்.
- இந்திய அரசமைப்பில் சமதர்மம் என்ற சொல் 42-வது திருத்தச்சட்டம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், சமதர்மம், முதலாளித்துவம் ஆகிய பொருளாதாரங்கள் இணைந்த கலப்புப் பொருளாதார முறை கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்தியாவை பொறுத்தவரை மதச்சார்பின்மை என்பது இந்தியாவில் அரசு மதம் என ஒன்றில்லை; அனைத்து மதங்களும் சமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதாகும்.
- இந்தியக் குடியரசு என்பது இந்தியாவில் முடியரசு மூலமாக அல்லாமல் தேர்தல் மூலமாக அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதாகும்.

### நாடாளுமன்ற ஆட்சி முறை

- அமைச்சரவை குழு செயல்பாடுகளை நாடாளுமன்றம் கட்டுப்படுத்துவதால் நாடாளுமன்ற ஆட்சிமுறை என அழைக்கப்படுகிறது.

- நாடாளுமன்ற முறை அரசில் நிர்வாகம் நாடாளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டது; நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவு இருக்கும்வரை அந்த அரசு நீடிக்கும்.

### ஒற்றைக் குடியுரிமை

- இந்திய அரசமைப்பு ஒற்றைக் குடியுரிமை வழங்குகிறது. ஒன்றிய அரசு வழங்கும் குடியுரிமையே அனைத்து மாநிலங்களுக்குமானது.
- 2015, பிப்ரவரி 27 அன்று மக்களவையில் குடியுரிமை சட்டம் 1955-ல் திருத்தங்கள் கொண்டுவந்துள்ளது.
- பதிவு அல்லது இயல்புரிமை முறையில் இந்திய குடியுரிமை கோரி விண்ணப்பிக்கும் நபர் குறிப்பிட்ட தகுதிகளை நிறைவுசெய்தால் அவருக்கு குடியுரிமை வழங்கப்படும்.
- இந்தியாவில் தொடர்ந்து குடியிருந்தாலோ அல்லது அரசுப்பணியில் 12 மாதங்கள் இருந்தாலோ ஒரு நபர் இந்தியக் குடியுரிமைக்கோரி விண்ணப்பிக்க முடியும். ஆனால், அசாதாரண சூழல் நிலவுமானால் இந்தத் தகுதிகளைத் தளர்த்திக்கொள்ளவும் இந்த சட்டம் வழி வகுக்கிறது.

### வயது வந்தோர் வாக்குரிமை

- 'ஒரு நபர், ஒரு வாக்குரிமை' எனும் கோட்பாட்டின் அடிப்படையில் 18 வயது நிறைவடைந்தோர் தேர்தலில் வாக்களிக்கும் தகுதி பெறுகிறார்கள்.
- தேர்தலில் வாக்களிப்பதில் இந்திய குடிமக்கள் இடையே சாதி, மதம், பால், இனம் அல்லது தகுதி அடிப்படையில் எந்தவிதமான பாகுபாடும் கடைபிடிக்கப்படுவதில்லை.

### சுதந்திரமான, ஒருங்கிணைந்த நீதி அமைப்பு

- இந்தியாவில் நீதி துறையின் செயல்பாடுகளில் நிர்வாகத் தலையீடோ அல்லது நாடாளுமன்ற, சட்டமன்றங்களின் தலையீடோ இல்லாமல் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- ஒருங்கிணைந்த இந்திய நீதி அமைப்பில் உச்ச நீதிமன்றத்தின் கீழ் உயர் நீதிமன்றங்கள், கீழமை நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள் இயங்குகின்றன.

### அடிப்படை உரிமைகள்

- ஒவ்வொரு தனிநபரும் குறிப்பிட்ட அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதை அடிப்படைக் கொள்கையாக அரசமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்திய அரசமைப்பு, பகுதி III இல், அடிப்படை உரிமைகளுக்கான பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- அடிப்படை உரிமைகள் ஆறு தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன; அவையாவன: சமத்துவத்துக்கான உரிமை, சுதந்திரத்துக்கான உரிமை, சுரண்டப்படுவதற்கு எதிரான உரிமை,

மத வழிபாட்டுக்கான உரிமை, மற்றும் கல்வி, பண்பாட்டு உரிமை, அரசமைப்புப்படி நிவாரணம் கோரும் உரிமை. தொடக்கத்தில், சொத்து உரிமை உறுப்பு 31(அ)வின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, சொத்து உரிமையும் அடிப்படை உரிமையாக இருந்தது.

- 44-வது திருத்தச்சட்டம், 1978 சொத்து உரிமையை அடிப்படை உரிமையில் இருந்து நீக்கிவிட்டு, உறுப்பு 300(அ) ஆகச் சேர்த்தது. இதன் மூலம் சொத்து உரிமை சட்ட உரிமையாகக் கருதப்படுகிறது.
- இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் நீதிமன்றத்தால் நிலைநாட்டப்படுபவை ஆகும்.
- ஒரு நபர் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கருதுவாரானால் நீதிமன்றத்தினை நாடி நிவாரணம் அடைய முடியும். இதனையொட்டி நேரடியாகவே உச்ச நீதிமன்றத்தினை நாடும் உரிமை உறுப்பு 32-இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- மக்களுக்கான அரசியல் நீதியை அது உறுதிப்படுத்துகிறது. இந்தியாவில் அடிப்படை உரிமைகள் முழுமையானவை அல்ல. நாட்டின் பாதுகாப்பு தேவையைக் கருத்தில் கொண்டு உகந்த தடைகள் விதிக்கப்படலாம்.

'கல்வி உரிமை'

- இந்திய அரசமைப்பின் (82-வது திருத்தம் 2002) இந்திய அரசமைப்பு உறுப்பு 21 அ-வில், 6 முதல் 14 வயதுவரையான அனைத்துச் சிறார்களுக்கும் இலவச, கட்டாயக் கல்வி வழங்குவதை அடிப்படை உரிமையாக இணைத்துள்ளது.
- இதை அமலாக்கும் வகையில் மாநிலங்கள் விதிகளை வகுத்துக்கொள்ளலாம். சிறார் இலவச கட்டாயக் கல்வி சட்டம், 2009, அரசமைப்பு உறுப்பு 21-அ கீழ் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றும் வண்ணம் இயற்றப்பட்டது.

அரசின் வழிகாட்டு நெறிகள்

- அரசாட்சி தொடர்பாக அரசு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிகள் இந்திய அரசமைப்பின் நான்காவது பகுதியில் இடம் பெற்றுள்ளன.
- இந்திய அரசமைப்பின் தனித்தன்மை வாய்ந்த கூறுகளில் ஒன்று அரசு கொள்கை வழிகாட்டு நெறிகள் என்ற பகுதி ஆகும்.
- இதனை இந்தியாவில் சமூக, பொருளாதார நீதியை நிலைநாட்டும் வண்ணம் அரசு அவற்றை அமலாக்கம் செய்வதற்கான வழிகாட்டு நெறிகள் எனலாம்.
- ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம், இலவச கட்டாய அடிப்படைக் கல்வி, வேலை பார்க்கும் உரிமை ஆகியவற்றுக்கான குறிப்பிடத்தக்க விதிகளை அது கொண்டுள்ளது.
- இந்திய அரசமைப்பின் பாகம் IV-ன் கீழ் முதுமை, வேலையின்மை , நோய்வாய்ப்படுதல், வாழ்வாதாரத்திற்குத் தேவையான திட்டங்கள்,

பொருளாதாரரீதியாக பிற்படுத்தப்பட்ட பிரிவு மக்களுக்கு சிறப்பு முன்னுரிமை, வளங்கள் பகிர்வில் உள்ள பாகுபாடுகள் போன்றவற்றிற்கு அரசு உதவிகள் வழங்குவதற்கான பிரிவுகள் கூறப்பட்டுள்ளன.

- அரசு கொள்கை வழிகாட்டு நெறிகளில் வழங்கப்பட்டுள்ள விதிகள் நீதிமன்றங்கள் மூலமாக நிலைநாட்டப்பட முடியாது என்றாலும் நாட்டின் அரசாட்சிக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றன.

## அடிப்படைக் கடமைகள்

- 42-வது திருத்தத்தின் வாயிலாக அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- அரசமைப்பு பகுதி IVஅ உறுப்பு 51அ-வில் வழங்கப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகள் ஒவ்வொரு இந்தியனும் பின்பற்ற வேண்டிய அறக் கடமைகள் ஆகும்.
- இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமைகள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.
- அ) அரசமைப்பிற்கு கீழ்ப்படிந்து அதன் மாண்புகள், தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியனவற்றிற்கு மரியாதை அளிக்க வேண்டும்.
- ஆ) நமது நாட்டு விடுதலை போராட்டத்தின் போது பின்பற்றப்பட்ட உன்னதமான மாண்புகளை ஏற்று பின்பற்ற வேண்டும்.
- இ) இந்தியாவில் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியனவற்றைப் பாதுகாத்து போற்ற வேண்டும்.
- ஈ) தேவையான காலங்களில் அழைப்பு விடுக்கப்படும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்கு சேவைபுரியவும் முன்வர வேண்டும்.
- உ) மத, மொழி, சாதி வேறுபாடுகளை கடந்து மக்களிடையே ஒருமைப்பாட்டினையும் உலகளாவிய சகோதரத்துவத்தினையும் உருவாக்க வேண்டும்; பெண்களின் மாண்பிற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.
- ஊ) நமது பன்மைத்துவப் பண்பாட்டின் வளமான மரபினை மதித்துப் பாதுகாக்க வேண்டும்.
- எ) வனங்கள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் உள்ளிட்ட நமது இயற்கை வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தி அனைத்து உயிரினங்களும் வாழத் தகுந்ததாக பராமரிக்க வேண்டும்.
- ஏ) அறிவியல் ஆர்வம், மனிதநேயம், தேடல் நெறி, சீர்த்திருத்தம் ஆகியனவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.
- ஐ) பொதுச் சொத்துகளை சேதப்படுத்தாமல் மற்றும் பாதுகாக்கவும் வேண்டும்.
- ஒ) நமது முயற்சிகள் மற்றும் சாதனைகளை மென்மேலும் உயர்ந்த இலக்குகளை நோக்கி எடுத்துச் சென்று நாட்டினை மென்மேலும்

தொடர்ந்து உயர்த்தும் வண்ணம் தனிநபர் மற்றும் கூட்டு செயல்பாடுகளில் சிறப்புத்திறன் பெற்றுத் முன்னேற வேண்டும்.

- ஓ) ஆறு வயது முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட சிறார்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை அச்சிறார்களின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் வழங்க வேண்டும்.

### கூட்டாட்சி அல்லது ஒற்றையாட்சி

- இந்தியா சிதைக்க முடியாத ஒன்றியமும் (மத்திய அரசும்) சிதைக்கத்தக்க மாநிலங்களும் கொண்ட ஆட்சி முறையாகும்.
- அதாவது நெருக்கடிநிலை காலத்தில் ஒற்றை ஆட்சி குணாம்சம் கொண்டது என்பது இதன் பொருளாகும்.
- ஒன்றியம் முழுமையான கூட்டாட்சி என்று கூறமுடியாது. ஆனால், கிட்டத்தட்ட கூட்டாட்சி முறை என்று கூறலாம்.
- வடிவத்தில் கூட்டாட்சி அமைப்பைக் கொண்டிருந்தாலும் இந்திய அரசமைப்பு ஒற்றையாட்சி முறை, கூட்டாட்சி முறை இரண்டையும், நேரம், சூழல் போன்ற தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளத்தக்க ஆட்சிமுறையைக் கொண்டுள்ளது.

### நீதி சீராய்வு சமநிலை நாடாளுமன்ற மேலாதிக்கம்

- இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் கண்காணிப்பதிலும் நாடாளுமன்ற நிர்வாகச் செயல்பாடுகளில் தேவைப்பட்டால் தலையிடுவதிலும் நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது இது இந்திய அரசமைப்பின் சிறப்புக்கூறுகளில் ஒன்று ஆகும்.
- நீதி அமைப்பும், நாடாளுமன்றமும் ஒன்றுக் கொன்று சமமான மேலாதிக்க தன்மை கொண்டவை.
- நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டம் அரசமைப்பின் அடிப்படை தத்துவத்திற்கு முரணாக இருந்தால், அதை செல்லாததாக்கும் அதிகாரம், நீதி சீராய்வு எனப்படும்.

### இந்தியக் குடியுரிமை

- ஒரு நாட்டின் சட்டப்பூர்வ உறுப்பினர்கள் யார் என்பதை அடையாளம் காண்பது குடியுரிமை ஆகும்.
- குடியுரிமைச் சட்டம், 1955, குடியுரிமை பெறுதல் மற்றும் உறுதிப்படுத்தலை ஒழுங்குபடுத்துகிறது.
- பிறப்பு, வாரிசு, பதிவு, இயற்கை வயப்படுத்தல் மற்றும் ஒரு பகுதியில் தொடர்ந்து வசித்தல் ஆகிய வழிகளில் குடியுரிமை பெற இந்திய அரசமைப்பு வழிவகை செய்துள்ளது. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குடியுரிமையை விலக்கிக்கொள்ளவும் ரத்துசெய்யவும் விதிகள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்தியாவின் அயல்நாட்டு குடிமக்கள் பதிவுமுறைகளும், அவர்களுக்குரிய

உரிமைகளும் அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ளன.




➤

## இந்தியாவில் நாடாளுமன்ற மக்களாட்சி

➤ உறுப்பு 79இன் கீழ் இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் குடியரசுத்தலைவர் மற்றும் ஈரவைகளைக் கொண்டது ஆகும்.

➤ ஈரவைகள் மாநிலங்களவை, மக்களவை என்று அறிவோம். ஒரு கூட்டாட்சியில் நாடாளுமன்றம் ஈரவை கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில் இதனை ஏற்கப்படுகிறது:

➤ மேலவை என்று அழைக்கப்படும் மாநிலங்களவை மாநிலங்களின் பிரதிநிதித்துவமும் கீழவை என்று அழைக்கப்படும் மக்களவை மக்கள் பிரதிநிதித்துவமும் கொண்டவையாகும்.

➤ ஈரவைகளும் தன் இயல்பில் செயல்பட்டு மாநிலங்களின் ஒற்றுமை, ஒன்றிய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்கின்றன.


➤ நாடாளுமன்ற முறை அரசு - இந்தியா

➤ குடியரசுத்தலைவர் முறை அரசு - அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள்

**செயல்பாடு**

நாடாளுமன்ற முறை அரசு, குடியரசுத்தலைவர் முறை அரசு ஆகியவற்றிற்கு மேலும் சில உதாரணங்களை கூறவும்.

| நாடாளுமன்ற முறை அரசு | குடியரசுத்தலைவர் முறை அரசு |
|---|---|
| இந்தியா | அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் |
| | |




## முக்கிய விவாதம்

➤ 2014 ஆகஸ்ட் 1: தமிழ்நாட்டில் நீதிமன்ற மொழியாக தமிழை பயன்படுத்துதல்.

➤ தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் நடைபெற்ற ஆரோக்கியமான விவாதங்கள்

➤ இந்திய அரசமைப்பு சட்டத்தின் கீழ் உருவான மதராஸ் மாகாண முதல் சட்டமன்றத்தில் (1952-

1957). இராஜாஜி அரசு கொண்டுவந்த அடிப்படைக் கல்வி திட்டம் விமர்சிக்கப்பட்டது.

- எதிர்க்கட்சிகளுடன் ஆளும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ஒரு பகுதியினர் உட்பட இத்திட்டத்தை கடுமையாக எதிர்த்தனர்.
- இத்திட்டம் சாதி அடிப்படையிலான படிநிலை மேலாதிக்கத்தை மீண்டும் கொண்டு வரும் என்று விமர்சித்தனர். பின்னர் முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற காமராஜர் அமைச்சரவையில் 1954 அரசின் கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம் இத்திட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவித்தார்.
- அதேசமயம், இராஜாஜி ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களை பாதுகாக்கும் நிலச் சட்டங்கள் தொடரப்பட்டன.
- "சென்னை மாகாண தலைவர் சி.இராஜாஜி தனது முதல் நிதி நிலை அறிக்கையை 1937இல் மதராஸ் சட்டமன்றம், செனட் அவை, மதராஸ் பல்கலைக்கழக சேப்பாக்கம் வளாகத்தில் தாக்கல் செய்தார்".
- 1967இல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்தது. சி.என். அண்ணாதுரை முதல்வராக பதவி ஏற்றார்.
- அவரது ஆட்சியில் இந்து திருமணச் சட்டம் திருத்தப்பட்டு 'சுயமரியாதை திருமணங்கள்' அதாவது மத சடங்குகள் இல்லாமல் மேற்கொள்ளப்படும் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டன.
- அவருக்கு அடுத்து பதவி ஏற்று, ஐந்து தடவைகள் முதல் அமைச்சராக பதவி வகித்த மு.கருணாநிதி பல சட்டங்களையும் எண்ணற்ற தீர்மானங்களையும் கொண்டு வந்துள்ளார்.
- அவர் கொண்டு வந்த கடைசி சட்டமுன்வரைவு பிற்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக்குள் முஸ்லீம்களுக்கும் சிறப்பு உள் ஒதுக்கீடு வழங்குவதுடன் பட்டியல் இனங்களுக்கும் மற்றும் பழங்குடியினருக்குமான ஒதுக்கீட்டின் கீழ் அருந்தியர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்குகிறது.
- அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றகழகத்தின் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையிலான பத்து ஆண்டுக்கால ஆட்சியில் (1977-1987) வருவாய் நிர்வாக துறையில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.
- குறிப்பாக, வாரிசு அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலரான "கர்ணம்" பதவிக்கு முடிவு கட்டினார். மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி சத்துணவுத் திட்டமாக மேம்படுத்தினார்.
- 1992 நவம்பரில் உச்ச நீதிமன்றம் மண்டல் ஆணையம் வழக்கில் தீர்ப்பு வழங்கியது. அதில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

- இதனைத் தொடர்ந்து தமிழகத்தில், பிற்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதிகள், பழங்குடியினர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த இடஒதுக்கீட்டினை பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் கூட்டப்பட்டு 69 சதவீதம் ஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம்

- தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது. 189 உறுப்பினர்கள் பொது தொகுதிகளிலிருந்தும் 45 உறுப்பினர்கள் தனித் தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- சட்டமன்றத்தில் முதல் கூட்டத் தொடர் முதல் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து (1952). 3.5.1952 அன்று தொடங்கியது.
- அரசமைப்பு உறுப்பு 333இன் கீழ் ஆங்கிலோ-இந்திய பிரதிநிதி ஒருவர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.
- 16.05.2016 அன்று தமிழக சட்டமன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடந்ததையொட்டி 15-வது தமிழக சட்டமன்றம் 21.05.2016 அன்று அமைக்கப்பட்டது.

பொதுக் கணக்கு குழு

- மக்களவை -உறுப்பினர்களிலிருந்து ஒருவர் பொது கணக்குக் குழுத்தலைவராக மக்களவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.
- இதில் 1967-1968ஆம் ஆண்டில் முதன்முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே பொதுக் கணக்குக் குழுத்தலைவராக மக்களவைத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இக்குழு மக்களவைத் தலைவர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒரு நாடாளுமன்றக் குழுவாகவே கருதப்படுகிறது.
- 1950 ஜனவரி முதல் 2018 ஏப்ரல் வரை இக்குழு 1596 அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளது.

அரசமைப்புத் திருத்தச்சட்ட முன்வரைவு

- அரசமைப்பில் உள்ள ஒரு விதியில் திருத்தம் கோரும் சட்ட முன்வரைவுகள் அரசமைப்புத் திருத்தச்சட்டம் முன்வரைவு என்று அழைக்கப்படுகிறது. உறுப்பு 368 (2) ன் கீழ் வரும் அனைத்து விதிகளும் இதில் அடங்கும். இந்த சட்ட முன்வரைவினை நாடாளுமன்றத்தில் ஈரவைகளிலும் கொண்டு வரலாம்.

உறுப்பு 370

- அரசமைப்பு உறுப்பு 370 என்பது ஜம்மு - காஷ்மீர் பகுதிக்கு சிறப்பு தன்னாட்சி தகுதி வழங்குவது ஆகும். இந்திய அரசு 5 ஆகஸ்டு 2019 அன்று ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு தகுதியை ரத்துசெய்தது
- சங்கரலிங்கனார் காந்திய வாதியும் இந்திய விடுதலைக்காக போராடிய தமிழ் வீரரும் ஆவார். 1895இல் விருதுநகர் மாவட்டம் மண்மலைமேடு கிராமத்தைச் சேர்ந்த கருப்பசாமி

வள்ளியம்மாளுக்கு மகனாக பிறந்தார். 1917இல் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்தார்.

- இராஜாஜியின் மீது ஏற்பட்ட ஈர்ப்பால் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற சங்கரலிங்கனார் 1930இல் காந்தியுடன் தண்டி உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கு பெற்றார்.
- மதராஸ் மாநிலத்திலிருந்து தெலுங்கு பேசும் மக்களைப் பிரித்து, சென்னையை தலைநகராக கொண்டு தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்று பொட்டி ஸ்ரீராமலு 1952இல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.
- இதைத் தொடர்ந்து பெயர் மாற்றும் பிரச்சனை எழுந்தது. இதைத் தொடர்ந்து 1956இல் மதராஸ் மாநிலத்தை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் தொடங்கினார்.
- பெயர் மாற்றம் உள்ளிட்ட 12 கோரிக்கைகளை வலியுறுத்தி 1956 ஜூலை 27 அன்று விருதுநகரில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.
- இந்த உண்ணாவிரதப் போராட்டம் 75 நாட்களைக் கடந்தது சங்கரலிங்கனார் உடல் நலிவுற்றதால் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடும் படி சி.என். அண்ணாதுரை, ம.பொ.சிவஞானம், ஜீவானந்தம் ஆகியோர் வேண்டுகோள் விடுத்தும் அவர் ஏற்கவில்லை.
- 1956 அக்டோபர் 13 அன்று உண்ணாவிரதப் போராட்டத்தின் 76ஆம் நாள் சங்கரலிங்கனார் உயிர் நீத்தார்.

### முக்கிய கூட்டு கூட்டங்கள்

- வரதட்சணை ஒழிப்புச் சட்டம் 1959-6 மற்றும் 9 மே 1961
- பயங்கரவாத தடுப்புச் சட்டம்-2002 மார்ச்

### தமிழ்நாடு

- மதராஸ் மாகாணத்தை தமிழகம் என பெயர் மாற்றக் கோரி தியாகி சங்கரலிங்கனார் 20.07.1956 முதல் 10.10.1956 வரை 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.
- மதராஸ் மாநில பெயர்மாற்றச் சட்டம் 14 ஜனவரி 1969 ஆண்டு தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- காந்திய வழியில் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தவர்.

### தேர்வுக்குழு

- தேர்வுக்குழுவில் குறைந்த எண்ணிக்கையில் உறுப்பினர்களை குறிப்பிட்ட காரணத்திற்காக நியமிக்கப்பட்டிருப்பர்.
- இந்த தேர்வுக்குழு முறை வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற மக்களாட்சி முறையிலிருந்து பிறந்தது ஆகும்.

- மாநிலங்களவை விதிகள் மற்றும் நடைமுறையின் உறுப்பு 125இன் கீழ் எந்தவொரு குறிப்பிட்ட சட்ட முன்வரைவையும் தேர்வுக்குழுவுக்கு அனுப்பும்படி எந்த ஒரு உறுப்பினரும் தீர்மானம் கொண்டு வர முடியும்.
- தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்த சட்ட முன்வரைவு தேர்வு குழுவின் பரிசீலினைக்கு அனுப்பப்படும்.
- இவ்வாறு தீர்மானம் கொண்டு வருவதற்கு தேர்வுக் குழுவின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் குறைந்தபட்ச உறுப்பினர்களாக (Quorum - கோரம்) அவையில் இருப்பது அவசியம். இவ்வாறு முன்மொழியப்படும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு வெற்றி - தோல்வி இன்றி முடிந்தால் அவைக்குத் தலைமை ஏற்பவரின் முடிவே இறுதி முடிவாகும்.
- சட்ட முன்வரைவில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு அம்சம் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் எனில் அதற்கென ஒரு துணைக் குழுவை தேர்வுக்குழு அமைத்துக்கொள்ளலாம்.
- இந்த செயல்முறையில் ஏதேனும் கேள்விகள் எழுந்தால் அதனை மாநிலங்களவைத் தலைவர் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும். அவரது முடிவே இறுதியானது.
- ஒரு சட்ட முன்வரைவு ஒரு அவையில் நிறைவேற்றப்பட்டு மற்றொரு அவையால் நிராகரிக்கப்படும் போதும் அல்லது ஏதேனும் ஒரு ஆட்சேபனை எழுப்பப்படும் போது அல்லது ஆறு வாரத்திற்கும் அதிகமாக இழுபறி நிலை நீடிக்கும் போதும் குடியரசுத்தலைவர் ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்தை கூட்டித் தீர்வு காணலாம்.
- அந்த முன்வரைவு அமர்ந்துள்ள ஈரவைகளின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை வாக்குகளை பெற்றால் அந்த முன்வரைவு நிறைவேற்றப்படும்.
- ஆனால் பண முன்வரைவு அல்லது அரசியல் அரசமைப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றின் போது இதுபோன்று கூட்டு கூட்டத்தினை கூட்டி சட்டமாக்க இந்திய அரசமைப்பு அனுமதிக்கவில்லை.

## ஆறாம் வகுப்பு

### பேரண்டம் மற்றும் சூரியக் குடும்பம்

### புவியின் சுழற்சி

- புவி சூரியனை மேற்கிலிருந்து கிழக்காக சுற்றி வருவதால் சூரியன் கிழக்கில் இருந்து மேற்காக செல்வதாக தோன்றுகிறது

### புவியின் வடிவமும் சாய்வும்

- புவி கோள வடிவம் ஆனது. இது தன் அச்சில் சுழலுகிறது.
- புவியின் வட துருவத்திலிருந்து புவி மையத்தின் வழியாக தென் துருவம் வரை செல்லக்கூடிய ஒரு கற்பனை கோடு புவியின் அச்சு எனப்படும்.
- தன்னத்தில் 23 அரை டிகிரி சாய்ந்து தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது.
- தன் சுற்றுவட்ட பாதைக்கு 66 டிகிரி கோணத்தை இந்த சாய்வு ஏற்படுகிறது.
- புவியின் சுழலும் வேகம் நிலநடுக்கோட்டு பகுதியில் 1670 கிலோ மீட்டர் /மணி ஆகவும், 60 டிகிரி வடக்கு அட்சரேகையில் 845 கிலோமீட்டர் மணியாகவும், துருவப் பகுதியில் சுழலும் வேகம் சுழியமாகவும் இருக்கும்.

### சுழலுதல்

- புவி தன் அச்சில் தன்னைத் தானே சுற்றுவதைச் சுழலுதல் என்று கூறுகிறோம்.
- மேற்கிலிருந்து கிழக்காகச் சூழலும் புவியானது ஒரு முறை சுழல்வதற்கு 23 மணி நேரம் 56 நிமிடங்கள் 4.09 வினாடிகள் எடுத்துக் கொள்கிறது.
- புவி ஒரு முறை சுழல்வதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தை ஒரு நாள் என்று அழைக்கிறோம்.
- புவி ஒருமுறை சுழலுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தை ஒரு நாள் என்று அழைக்கிறோம்.
- புவி சுழலுவதன் கரணமாக இரவு , பகல் ஏற்படுகிறது. புவி கோள வடிவமாக உள்ளதால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சூரிய வெளிச்சம் புவியின் ஒரு குதியில் மட்டுமே படுகிறது. அப்பகுதிக்கு அது பகல் பொழுது ஆகும்.
- புவியின் ஒளிபடாத பகுதி இரவாக இருக்கும். பருப்புவியின் ஒளிபடும் பகுதியையும் ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோட்டிற்கு ஒளிர்வு வட்டம் என்ற பெயர்.

### சுற்றுதல்

- புவி தன் நீள் வட்ட பாதையில் சூரியனைச் சுற்றி வரும் நகர்வையே சுற்றுதல் என்கிறோம்.
- புவி வினாடிக்கு 30 கிலோமீட்டர் வேகத்தில் சூரியனை சுற்றி வருகிறது
- புவி ஒரு முறை சூரியனை சுற்றிவர 365 1/4 நாட்கள் ஆகிறது.
- தோராயமாக 365 நாட்களாக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு வருடம் என்று அழைக்கப்படுகிறது.
- மீதமுள்ள 1/4 நாட்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாளாக கணக்கிடப்பட்டு பிப்ரவரி

மாதத்தில் கூடுதலாக ஒரு நாள் சேர்க்கப்படுகிறது.

- அதாவது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பிப்ரவரி மாதத்திற்கு 29 நாட்களாக இருக்கும். அந்த வருடம் லீப் வருடம் என்று அழைக்கப்படுகிறது. பூமி தன் அச்சில் சாய்ந்து சூரியனை சுற்றி வருவதால் பருவ காலங்கள் தோன்றுகின்றன.




- 'சூரிய அண்மைபுள்ளி' (Perihelion) என்பது புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு மிக அருகில் வரும் நிகழ்வாகும்.
- சூரிய சேய்மை (Aphelion)என்பது புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு தொலைவில் காணப்படும் நிகழ்வு ஆகும்
- புவி சூரியனை சுற்றி வருவதால் மார்ச் 21ஆம் தேதி முதல் செப்டம்பர் 23ஆம் தேதி வரை 6 மாதங்கள் புவியின் வட அரைக் கோளம் சூரியனை நோக்கி சாய்ந்து இருக்கும்
- அச்சமயத்தில் தென் அரைக் கோளம் சூரியனிடமிருந்து விலகி காணப்படுகிறது
- அடுத்த ஆறு மாதங்கள் அதாவது செப்டம்பர் 23ஆம் தேதி முதல் மார்ச் 21ஆம் தேதி வரை பூமியின் தென் அரைக்கோளம் சூரியனை நோக்கி சாய்ந்தும் வட அறைக்கோளம் சூரியனிடமிருந்து விலகியும் காணப்படும்
- இவ்வாறு புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனை சுற்றி வருவதால் சூரியன் நிலநடுக்கோட்டிற்கு வடக்காகவும் தெற்காவும் நகர்வதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது.
- இதன் காரணமாக மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23 ஆகிய நாட்கள் நிலநடுக்கோட்ட பகுதியில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழும் அதனால் புவியின் அனைத்து பகுதிகளிலும் பகல் இரவு பொழுது சமமாக கணக்கிடப்படும் எனவே இந்நாள்கள் சமபகலிரவு நாட்கள் என அழைக்கப்படுகின்றன.
- இதேபோன்று ஜூன் 21ஆம் நாள் கடக ரேகை மீது சூரியனின் செங்குத்து கதிர்கள் விழுவதால் வடஅரைக்கோளத்தில் அந்நாட்கள் மிக நீண்ட பகல் பொழுதை கொண்டிருக்கும் தென் அரைகோளம் நீண்ட இரவே கொண்டிருக்கும்
- இந்நிகழ்வு கோடைகால கதிர் திருப்பம் என்று அழைக்கப்படுகிறது.
- டிசம்பர் 22ஆம் தேதி மகர ரேகையின் மீது சூரியனின் செங்கத்து கதிர்கள் விழுகின்றன இந்நிகழ்விற்கு குளிர்காலம் கதிர் திருப்பம் என்ற பெயர்.
- இச்சமயத்தில் தென் அரைக் கோளத்தில் பகல் பொழுது நீண்டு காணப்படும்.

- வட அரைக்குளம் நீண்ட இரவை கொண்டிருக்கும்

## புவி கோளங்கள்

- புவியில் காணப்படும் மூன்று தொகுதிகள் பாறைக்கோளம், நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலம் ஆகும்.
- தகுந்த காலநிலையும் நிலவுவதால் உயிரினங்கள் வாழத் தகுதியுள்ள இடமாக புவி மாறியுள்ளது.
- உயிரினங்கள் வாழக்கூடிய குறுகிய மண்டலம் 'உயிர்க்கோளம்' என்று அழைக்கப்படுகிறது.

## பாறைக்கோளம் (Lithosphere)

- பாறை என்ற பொருள்படும் 'லித்தோஸ் (Lithos) என்ற கிரேக்கப் பதத்தில் இருந்து பாறைக்கோளம் (Lithosphere) என்ற சொல் பெறப்பட்டது.
- புவியின் மேற்பரப்பில் காணப்படும். பாறைகள் மற்றும் மண் அடுக்கைப் பாறைக்கோளம் என்று கூறுகிறோம்.
- இந்த நிலப்பரப்பில் உயிரினங்கள் காணப்படுகின்றன

## நீர்க்கோளம் (Hydrosphere)

- "ஹைட்ரோ" (Hydro) என்ற கிரேக்கச் சொல்லிருந்து பெறப்பட்ட சொல்லே ஹைட்ரோஸ்பியர் (Hydrosphere) ஆகும். இதற்கு நீர்க்கோளம் என்று பெயர்.
- இது பெருங்கடல்கள், கடல்கள், ஆறுகள், ஏரிகள், மலையுச்சிகளில் காணப்படும் னிக் விகைகள், வளிமண்டலத்தில் காணப்படும் நீராவி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

## வளிமண்டலம் (Atmosphere)

- 'அட்மோ' (Atmo) என்ற கிரேக்கப் பதத்திற்கு வளி அல்லது காற்று என்று பொருள்.
- புவியைச் சுற்றி காணப்படும் காற்றுத் தொகுதி வளிமண்டலம் எனப்படுகிறது.
- வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்களில் நைட்ரஜன் (78%) மற்றும் ஆக்ஸிஜன் (21%) முதன்மையான வாயுக்களாகும்.
- கார்பன்-டை- ஆக்ஸைடு, ஆர்கான், ஹைட்ரஜன், ஹீலியம் மற்றும் ஓசோன் வாயுக்கள் குறைந்த அளவில் காணப்படுகின்றன.

## உயிர்க்கோளம் (Biosphere)

- பாறைக்கோளம், நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலம் ஆகியவற்றோடு தொடர்புடைய உயிரினங்கள் வாழக்கூடிய ஒரு தொகுதி 'உயிர்க்கோளம்' எனப்படுகிறது.
- 'பயோ' என்ற கிரேக்கச் சொல்லிற்கு 'உயிர்' என்று பொருள்.
- உயிர்க்கோளம் பல்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு மண்டலமும் ஒப்பற்ற காலநிலை, தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைக் கொண்ட பகுதியாக உள்ளது. இம்மண்டலங்கள் 'சூழல் மண்டலங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

- மன்னார் வளைகுடா உயிர்க்கோள் பெட்டகம் இந்திய பெருங்கடலில் 10,500 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது.

tnpscbooks